விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 21 வெள்ளிக்கிழமை (04.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



இடம்பெயரும் மக்கள்...

## வடக்குக் கிழக்கில் தொடரும் மழை; பல்லாயிரக்கணக்கானோர் பாதிப்பு

(வவுனியா)

வடக்கு, கிழக்கில் மீண்டும் ஆரம்பித்துள்ள மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குறைந்தது 10பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

வடக்கே வவுனியா மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக 50 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். 747 குடும்பங்களைச்சேர்ந்த 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் உலர் உணவு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் (18ஆம் பக்கம் பார்க்க)

# தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் விரைவில் வெளியிடப்படும்!

## கூட்டமைப்புடனான சந்திப்பில் அரசு உறுதி

(கொழும்பு)

**சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் யுவதிகளின் பெயர் விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது. அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடைய்யில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களின் விபரங்கள் வவுனியாவில் வெளியிடப்படும் எனவும் பின்னர் அந்தத் தரவுகள் ஏனைய பிரதேசங்களிலும் காட்சிக்கு வைக்கப்படும் எனவும் அதில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.**

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த மாதம் 10ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள்குழுவுக்கும் இலங்கைஅரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் முதலாவது சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன் தொடர்ச்சியாக நேற்று மற்றொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச் சந்திப்பு தொடர்பாக சுரேஷ் எம்.பி. கூறியதாவது,

இன்றைய(நேற்றைய) சந்திப்பில் ஏற்கெனவே நாங்கள் பேசிய, இன்று இருக்கக்கூடிய முக்கிய பிரச்சினைகள் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக விடயங்கள்குறித்துப்பேசியிருந்தோம்.

முக்கியமாக காணாமல் போவது தொடர்பாக ஒரு தகவல் வங்கி ஒன்றை உருவாக்கியிருப்பதாகவும் இங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் இராணுவ முகாம்களில் எத்தனை கைதிகள் இருக்கின்றார்கள் என்ற விடயத் திரட்டு அங்கேயுள்ளதாகவும் ஆகவே காணாமல் போனவர்களுடைய பெற (18ஆம் பக்கம் பார்க்க)

## நாடுகடந்த தமிழீழ அரசு ஏன்? தமிழ்நாட்டில் கருத்தரங்கு

(சென்னை)

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை சென்னையில் கருத்தரங்கு ஒன்றினை நாடுகடந்த தமிழீழ அரசு தோழமை மையம் என்னும் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

பேராசிரியர் சரசுவதி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் அறிமுக உரையினை தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த தியாகுவும் கருத்துரைகளை கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் மணிவண்ணன், ஊடகவியலாளர் அய்யநாதன், மருத்துவர் எழிலன் ஆகியோரும் வழங்குகின்றனர்.

ஈழத்தமிழர்புலம்பெயர்ந்துவாழும் நாடுகளில் செயற்பட்டுவரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தற்போது தமிழ் நாட்டிலும் தனது பரப்புரைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## 'நிவாரணம் கிடைக்கவில்லை' முரளிதரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் உரிய முறையில் சென்றடையவில்லை என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அரசாங்கத்தினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணம்வழங்கப்படுமானால் உரிய முறையில் மக்களை சென்றடையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணப்பொருட்கள் விநி (18ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு மத்திய அரசு உதவ வேண்டும்

### தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம்

(சென்னை)

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், கச்சதீவில் தமிழகத்துக்கு உள்ள உரிமைகளை மீண்டும் நிலை நாட்டுவதற்கேற்ற வகையில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாக வேண்டும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும் போன்ற 21 தீர்மானங்களை தி.மு.க. நிறைவேற்றியது.

தி.மு.க.பொதுக்குழு நேற்று சென்னை அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் முதல்வரும் தி.மு.க. தலைவருமான கருணாநிதி முன்னிலையில் நடைபெற்றது. (18ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு துறைமுகத்தில் வெடிப்பு; பத்துப் பேர் வைத்தியசாலையில்!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நேற்று மர்ம வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. அதன் காரணமாக 10 பேர்வரை காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. கொழும்புத் துறைமுகத்தின் டொக்யார்ட் பகுதியிலேயே நேற்று நண்பகல் அளவில் குறித்த மர்ம வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதனையடுத்து அப்பிரதேசம் எங்கும் பலத்த பதற்றம் தொற்றிக்கொண்டுள்ளது.

வெடிப்புச் சம்பவத்தின் காரணமாக டொக்யார்ட் பணியாளர்கள் 10பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். உடனடியாக அவர்கள் கொழும்புதேசிய மருத்துவமனைக்கு எடுத்துச் (18ஆம் பக்கம் பார்க்க)

## "வெள்ளிக்கிழமை அமைப்பு" அதிர்ச்சி!

# யாழில் இடம்பெறும் வன்முறைகளை நிறுத்தக் கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் போன்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து வெள்ளிக்கிழமை அமைப்பு (Friday Forum) அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

அத்துடன் யாழ். குடாநாட்டு மக்களின் பாதுகாப்பையும் மனிதவுரிமைகளையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு இவ் அமைப்பு கடிதம் ஒன்றையும் அனுப்பி உள்ளது.

இவ் விவகாரம் தொடர்பில் இவ் அமைப்பின்சார்பில் அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளரும் இராஜதந்திரியுமான ஜெயந்த தனபால, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குகடிதம்ஒன்றைஅனுப்பி வைத்துள் (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் தங்கம் அணிய முடியாதநிலை!

### ஆதாரம் காட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பெண்கள் தாலி அணிந்து செல்வதற்குக் கூட சுதந்திரமில்லை என குமரன் பத்மநாதனே தெரிந்து வைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குமரன் பத்மநாதன் குறித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது, (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# மோட்டார் பூட்டிய அனைத்து வாகனங்களும் பதியப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் பூட்டிய அனைத்து வாகனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனடிப்படையில் அவ் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் பெறப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் மோட்டார் வாகன விற்பனை நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 49சிசி மோட்டார் சைக்கிள்களும் பதிவு செய்யப்பட்டு சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை!

## எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் உறுதி

(புதுடில்லி)

தமிழக சட்டமன்ற தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையும் தமிழக மீனவர் பிரச்சினையும் முக்கியமாக பிரதிபலிக்கும் என இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் இல்லத்துக்கு சென்ற மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழக மீனவர்கள் பிரச்சினை உட்பட ஐந்து பிரச்சினைகள் மீது மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடும் போதே சுஷ்மா சுவராஜ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் போது அவர்களை இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்வது, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நிவாரண பணிகள், அமெரிக்காவில் இந்தியமாணவர்களின்கால்களில்கண்காணிப்பு கருவி மாட்டிய விவகாரம் உட்பட ஐந்து பிரச்சினைகள் குறித்து கிருஷ்ணா என்னிடம் அளித்த விளக்கம் திருப்தி அளிப்பதாக இருந்தது.

வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் கொழும்பு சென்று இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றி பேசினார் என்றும், இந்த பேச்சு வார்த்தை திருப்தியாக இருந்ததாகவும் என்னிடம் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார்.

இலங்கை தமிழர் பிரச்சினையும், தமிழக மீனவர் பிரச்சினையும் தமிழக சட்டமன்ற தேர்தலில் முக்கியமாக பிரதிபலிக்கும்.

கட்சி ரீதியாக தமிழ்நாட்டின் பொறுப்பை நான் ஏற்று இருப்பதால் இதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன்.

இலங்கை தமிழர் நிவாரண பணிக்காக



இதுவரை 500கோடி ரூபாய் இலங்கை அரசாங்கத்துக்கு கொடுத்து இருப்பதாகவும், இன்னும் தேவைப்பட்டால் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் என்னிடம் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார் என அவர் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார். (ச-5)

## உள்ளூராட்சி ஆணையாளரின் தந்தை காலமானார்

(திருகோணமலை)

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சனின் தந்தையார் கபிரியேல்பிள்ளை யோசப் (வயது 85) நேற்றுக் காலை(03.02.2011) திருகோணமலையில் காலமானார்.

இவர் இலங்கை கடற்படை பொறியியல் பிரிவின் சிரேஷ்ட பதவி நிலை அதிகாரியாக கடமையாற்றியவர்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை நாளை சனிக்கிழமை. திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ச)

## பொன் வல்லிபுரம் மறைவையொட்டி இந்து மாமன்றத்தின் அனுதாபம்

மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் முன்னாள் அறங்காவலரான பொன்மனச்செல்வர் பொன்.வல்லிபுரத்தின் மறைவையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

இது தொடர்பில் இந்து மாமன்றம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

இவர் தீவிர இறைபக்தியாளராகவும், சமய சமூக சேவையாளராகவும், சிறந்த மனிதநேயராகவும் திகழ்ந்தார். ஆலய அறங்காவலராக நீண்ட காலமாக சிறப்பாகச் செயற்பட்டுவந்த பெருமை இவருக்குண்டு. கொழும்பு மாநகரில் இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் என்பதையும் சிறப்பாகச் சொல்லலாம். தனது சமய சமூக அறப்பணிகள் ஊடாக இந்து மக்களினதும், நம் நாட்டு பிரமுகர்களினதும், இந்து நிறுவனங்களினதும் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றிருந்தவர் என்றுள்ளது. (ச)

**STUDY IN UK**

யாழ்.மாணவர்களுக்கு ஓர் அரிய இறுதிச் சந்தர்ப்பம்

மிக விரைவான சேவை

மொத்த செலவு 7 லட்சம் மட்டுமே

MAR / APR INTAKE

- IELTS தேவையில்லை
- நீங்கள் வழங்கும் சகல பணமும் வங்கி மூலமாக செலுத்த முடியும். எம் மூலமாகவும் அத்தாட்சி பத்திரம் வழங்கப்படும்.
- யாழ். மாணவர்களுக்காக யாழில் உள்ளவரால் நேரடியாகச் செய்யப்படும் நம்பிக்கையான திருப்தி மிக்க சேவை
- A-Grade கல்லூரிகளிடமிருந்து நேரடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

O/L தகைமை இல்லாத 23 வயதிற்கு குறைவானவர்கள் விண்ணப்பிக்க இதுவே இறுதிச் சந்தர்ப்பம்

- கல்லூரிக் கட்டணத்தை உடனடியாக செலுத்த முடியாதவர்களுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- நாம் குறிப்பிடும் காலத்தினுள் நீங்கள் U.K செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தையும் மீளப் பெறலாம்.
- அனுபவமற்ற முகவர்கள் வழங்கும் போலி வாக்குறுதிகளை நம்பி அரிய இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.
- தேவையான ஆவணங்களுடன் உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

(Pass Port, கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்)

(3637)

தொடர்புகளுக்கு: Sana 0776277767

# இரு நாடு; ஒரு அலுவலகம் விசா பெற புதிய வசதி!

(கொழும்பு)

பிரிட்டன் மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளுக்கு செல்வதற்கான விசா விண்ணப்ப படிவத்தை அடுத்த வாரம் முதல் கொழும்பில் ஒரே இடத்தில் சமர்ப்பிக்க முடியுமென பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய இராச்சியத்தின் போர்டர் முகவரும்(UK Border Agency) அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமும் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் தற்போதுள்ள பிரிட்டன் விசா அலுவலகத்தில் இணைந்து செயற்படவுள்ளன.

இதன் மூலம் இலங்கைப் பிரஜைகள் பிரிட்டன் மற்றம் அவுஸ்திரேலிய நாடுகளுக்கான விசா விண்ணப்பத்தை ஒரே விசா விண்ணப்ப அலுவலகத்தில் மேற்கொள்ள முடியும்.

கொழும்பு, இல.278 யூனியன் பிளேஸ், அக்ஸஸ் ரவர்ஸ் 5ஆவது மாடியில் இயங்கும் விசா விண்ணப்ப அலுவலகத்தில் மேற்படி இருநாடுகளும் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் தமது விசா விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளவுள்ளன. (ச-5)

# வாரத்தில் இரண்டு தடவைகள் தமிழ் கற்பதற்கு ஏற்பாடு!

## அமைச்சர் வாசுதேவ அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சில் தான் உட்பட அனைவரும் மாதத்தின் முதல் வாரத்தில் இரண்டு தடவைகள் நான்கு மணித்தியாலங்கள் தமிழ் கற்கவுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் போன்ற அரச கொள்கைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் சரியான நிலைப்பாட்டில் இல்லாமையால் சமூகங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த தனது அமைச்சுக்கு முடியாமல் இருப்பதாகவும் அவர் நேற்றுக் கூறினார்.

தேர்தல் செயலகம் தனது அமைச்சிடம் மொழிபெயர்ப்பாளர்களை கேட்காமையால் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்ப இலக்கம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இரண்டாம் மொழியை கற்க ஊக்கப்படுத்தவுள்ளோம். ஏனையோரை கற்க கேட்கும் முன் தாங்கள் கற்க வேண்டும் என்ற அடிப்படையில், தான் உட்பட அமைச்சில் உள்ள அனைவரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இரண்டு தடவை நான்கு மணித்தியாலங்கள் தமிழ் கற்கவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-5)

# இன்று ஒரு தகவல்

## எடுக்கவோ? கோர்க்கவோ?

துரியோதனனின் அரண்மனை.

அங்கு அந்தப் புரத்துக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் கர்னனும் துரியோதனனின் மனைவி பானுமதியும் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் துரியோதனன் திடீரென்று அங்கே வந்து விடுகிறான். அவன் வருவது கர்னனுக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவனுடைய முதுகுக்குப் பின்னால் இவன் வருகிறான். எதிரில் உட்கார்ந்திருந்த பானுமதி தன் கணவன் வருவதைக் கவனித்தாள்.

ஒரு மரியாதைக்காக எழுந்திருக்க முயற்சி செய்தாள். ஆனால், கர்னன் என்ன நினைக்கிறான்? 'தான் தோற்றுப் போய்விடுவோம் என்று பயந்து பாதி ஆட்டத்திலேயே இவள் எழுந்து போக நினைக்கிறாள்' என்று நினைத்துக் கொண்டு அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைப் பிடித்து இழுக்கிறான்.

உடனே அந்த ஆபரணம் அறுந்து கீழே விழ அதிலிருந்த முத்துக்களெல்லாம் தரையில் நாலாபக்கமும் சிதறியது.

அதற்குப் பின்தான் தனக்குப்பின் துரியோதனன் வந்து நிற்பது கர்னனுக்குப் புரிந்தது.

கர்னனும் பானுமதியும் திகைத்துப் போய் நின்றார்கள். கணவன் இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டாரே என்ற பதற்றம் பானுமதிக்கு.

ஆனால், துரியோதனன் இதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. இது எதையுமே அவன் கண்டு கொள்ளவில்லை.

இவர்கள் இருவரையும் பார்த்து அவன் என்ன கேட்கிறான்?

"இந்த முத்துக்களை எடுக்கட்டுமா.... கோர்க்கட்டுமா" என்கிறான் சிரித்துக்கொண்டே!

இந்தக் கேள்வியில்தான் ஒரு சந்தேகம்.

கர்னன் துரியோதனனுக்கு நண்பன்.

அந்த நட்புக்காரணமாக துரியோதனன் தரையில் சிதறிய முத்துக்களை மட்டும் பொறுக்கி எடுத்திருக்கலாம்.

அதற்குப்பின் அதைக் கோர்த்து ஆபரணமாக்கித் தருவதற்கு அரண்மனையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

அதனால் இவன் 'எடுக்கட்டுமா?' என்று மட்டும் கேட்டதோடு விட்டிருக்கலாம். 'கோர்க்கட்டுமாடு?' என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டானே எதற்காக?

அன்றைக்கு அரண்மனையிலிருந்த எல்லோரும் இதைப்பற்றியே யோசித்துக் குழப்பிக் கொண்டிருந்தார்களாம். அங்கிருந்த அமைச்சர்களுக்கும் இதற்கு விடை தெரியவில்லை.

எல்லோரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த சமயத்தில் நல்லவேளை[illegible]க சகாதேவன் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தான். அவன் சாஸ்திர ஞானத்தில் கரை கண்டவன்.

அதனால் அவனிடம் ஓடிப்போய் எல்லோரும் சந்தேகத்தைக் கிளப்பினார்கள்.

சகாதேவன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான்.

அவன் சொன்ன விளக்கம் என்னவெனில், ஒருத்தனுக்குப் பயம் அதிகம் வந்துவிட்டால் அவனுடைய கை, கால் நடுங்கும். அது இயற்கை. அதேபோல் எவன் ஒருத்தன் ஆத்திரப்படுகிறானோ அவனுக்கும் கை, கால் நடுங்கும் – உதறும்.

இந்த இடத்தில் கர்னனும் பானுமதியும் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். அதாவது பயம் காரணமாக அவர்களது கை, கால் நடுங்கியது.

துரியோதனனுக்கு இந்த இடத்தில் ஆத்திரம் காரணமாக கை, கால் நடுங்க வேண்டும். ஆனால், அப்படி ஆகவில்லை. அவன் நிதானமாக, அமைதியாக இருந்தான்.

அதற்கு என்ன காரணம்?

அவன் தன்னுடைய மனைவியையும் சந்தேகப்படவில்லை. தன்னுடைய நண்பனையும் சந்தேகப்படவில்லை. அதனால் ஆத்திரமும் கொள்ளவில்லை. கை, கால்களும் உதறவில்லை. என் கை, கால் நடுங்கவில்லை. அதனால்தான் என்னால் முத்துக்களை எடுக்கவும் முடியும், கோர்க்கவும் முடியும். நான் நிதானமாகத்தான் இருக்கிறேன் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் "கோர்க்கட்டுமா" என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

இதுதான் சகாதேவன் சொன்ன விளக்கம்.

அவசரப்பட்டு ஆத்திரப்படக் கூடாது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒருத்தர் மாலையில் வீட்டுக்கு வந்தவுடன் 'எடுக்கட்டுமா கோர்க்கட்டுமா' என்பார். உடனே அவருடைய மனைவி ஒரு நூலையும் ஊசியையும் அவரிடம் கொடுப்பார். இவர் அந்த ஊசியில் நூலைக் கோர்த்துக் கொடுக்க வேண்டும்.

அதற்குப் பின்னர்தான் அவருக்கு சாப்பாடு கொடுப்பார். ஊசியில் நூலைக் கோர்க்கவில்லையென்றால் சாப்பாடு கிடையாது.

"ஏன் இப்படிச் செய்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"அவர் தண்ணி போடாமல் நிதானத்துடன் வந்திருக்கிறாரா என்பதை தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்த டெஸ்ட்" என்றார்.

"தண்ணி போட்டிருந்தால் அவர் என்ன பண்ணுவார்" என்று கேட்டேன்.

"அப்படியிருந்தால் அவர் அந்த நூலை ஊசியில் கோர்க்க மாட்டார்.... அதைவிடுத்து அந்த நூலை தன்னுடைய காதில் விட்டுக் கொண்டிருப்பார்" என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வவு. தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசார் நடவடிக்கைகள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்த புதிய மாணவர்களுக்கான அனுமதி தற்போது நிலவும் காலநிலை சீரின்மை காரணமாக, அன்றைய தினம் ஆரம்பிக்கப்படமாட்டாது எனவும் காலநிலை சீராகுமிடத்து மாணவர்களுக்கான புதிய அனுமதி எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என பீடாதிபதி க.பேர்ணாட் அறிவித்துள்ளார்.

எனவே, அன்றைய தினம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி கிடைத்து பதிவுகளை மேற்கொண்டவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ–2)

# கும்பாபிஷேகம்

கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை கண்ணகை அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.13 மணி தொடக்கம் 10.24 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நேரத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவாகமசாகரம் சிவஸ்ரீ.பாலகிருஷ்ண குமாரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ–3–29)

# மின்தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படும் என யாழ். பிரதேச மின்பொறி[illegible]யலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பார்லீட் மலோரி ஸ்ரொக் புரோக்கர்ஸ் பிறைவேட் லிமிட்டெட், யூரோவில் இன்வெஸ்மன்ட் பிறைவேட் லிமிட்டெட் ஆகியவற்றின் அனுசரணையுடன் "யாழ்.முகாமையாளர் சம்மேளனமும் யாழ்ப்பாண விஞ்ஞானசங்கம் சி பிரிவும்" ஆகியன இணைந்து நடத்தும் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "முதியோர் கவனிப்பில் வடஅமெரிக்க அனுபவம்" பற்றி அமெரிக்க (புளோரிடா) முதியோர் கவனிப்பு வைத்திய நிபுணர் சோமேசனும் "நவீன நாகரிகத்தினால் ஏற்படும் நோய்கள்" பற்றி வைத்திய நிபுணர் சச்சிகுகநந்தனும் இணைந்து வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். எனவே, [illegible]ர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுள்ளார். (ஸ்ரீ–2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 230 | 260 | 180 |
| உருளைக்கிழங்கு | 47 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 380 | 400 | 380 |
| தக்காளி | 80 | 120 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 90 | 120 | 90 |
| கரட் | 100 | 120 | 140 | 120 |
| பூசணி | 35-40 | 50 | 60 | 50 |
| புடோல் | 70 | 120 | 200 | 110 |
| வாழைக்காய் | 45 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200-300 | 300 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 150 | 150 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 180 | 130 |
| பீற்றூட் | 130 | 140 | 140 | 150 |
| கறிமிளகாய் | -- | 230 | 300 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 140 | 150 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 200 | 260 | 160 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 40-50 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 50 | 60-70 | 50 |

# இராசி பலன்

*04.02.2011*
*(தை 21, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*பிரதமை முற்பகல் 9.52 மணி வரை*
*அவிட்டம் மாலை 5.13 மணிவரை*
*இராகு காலம் 11.05-12.35 மணிவரை*
*சுப நேரம் 6.35-8.05 மணிவரை*
*வீரமாமுனிவர் நினைவு தினம்*
*63 ஆவது சுதந்திர தினம்.*

**மேடம்** இலாபம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவலொன்று வந்து சேரும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**இடபம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடியே கிடைக்கும், சுப சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** போட்டியாக இருந்தவர்கள் மனம்மாறுவர், தெய்வவழிபாடு மகத்துவம் தரும், பிரயாணத்தால் நன்மையுண்டு, கூட்டுத் தொழில் வளர்ச்சியுண்டு.

**கடகம்** உதவி செய்வதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சிறு மனஸ்தாபங்கள் தோன்றி மறையும், பணத்தட்டுப்பாடு ஏற்படலாம்.

**சிங்கம்** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், கனவுகள் பலிதமுண்டு, புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், சுவாரஸ்யமான நாள், உடல்நலம் ஆரோக்கியமாக இருக்கும்.

**துலாம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும், வாகன சுகமுண்டு, தொழில் நன்மையுண்டு.


**தனுசு** உடன்பிறப்புக்கள் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலை உயரும்.

**மகரம்** தொலைபேசிச் செய்தி தொழில் வளர்ச்சிக்கு வழி வகுக்கும், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்குக் கிடைக்கும், உஷ்ணமான நாள்.

**கும்பம்** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், சுபசெலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

வளவன்





வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சி.தவனீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் நிற்பதையும் விருந்தினர்கள் தரம் 1 மாணவர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வல்வெட்டித் துறை செய்தியாளர்)

# அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய மீனவர்

(பொலிகண்டி)

பொலிகண்டிப் பகுதியில் கடலுக்குச் சென்ற மீனவர் ஒருவரின் படகு கடும் காற்றினால் இழுக்கப்பட்டு கடலினுள் மூழ்கியது.

அதில் சென்ற மீனவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பி நீந்திக் கரை சேர்ந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் பொலிகண்டியைச் சேர்ந்த அன்ரனி சகான் நிக்ஷன் (வயது 40) என்ற மீனவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். இதன்போது ஏனைய மீனவர்கள் ஒன்றுசேர்ந்து படகினை மீட்டுக் கரைக்கு இழுத்து வந்தனர்.

இருப்பினும் படகு பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

மேலும் அப்படகில் இருந்த இயந்திரம் , வலைகள் என்பன கடலில் மூழ்கி விட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-48)

# நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு தம்புவத்தை ஒழுங்கையில் நேற்றிரவு நீரிறைக்கும் இயந்திரம் (மோட்டார்) ஒன்று திருட்டுப் போயுள்ளது.

இச்சம்பவம் நேற்றிரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, வீட்டிலிருந்தவர்கள் இரவு நேரத்தில் தூங்கிக் கொண்டிருந்த வேளையில், திருடன் தருணம் பார்த்து வீட்டின் வளவிலிருந்த மோட்டாரைத் திருடியுள்ளான்.

இது தொடர்பாக வீட்டிற்கு அண்மையில் உள்ள பாதுகாப்புப் படையினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் நேரில் சென்று விசாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சுன்னாகம் பொலிஸாரிடமும் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(அல்வாய்)

யாழ்.மாவட்ட ஆங்கில ஆதரவு மையத்தினால் வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு வருகை தரும் ஆசிரியர்களின் பெயர்களை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் வடமராட்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்திக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பங்குபற்றும் ஆசிரியர்கள் தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான ஆங்கிலப் பாடப் புத்தகங்களையும் செயல் நூல்களையும் ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றையும் கொண்டு வருதல் வேண்டும்.

தரம் 3 தொடக்கம் தரம் 5 வரை ஆங்கிலம் கற்பிக்கும் கற்பிக்க விரும்பும் சகல ஆசிரியர்களும் மேற்குறித்த செயலமர்வில் தவறாது பங்குபற்றுதல் வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள்

## மௌலவி சுபியான் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் வசிக்கும் நாவாந்துறை மற்றும் ஐந்து சந்திக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார்.

இவ் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி புனரமைப்பதற்கு 80 இலட்சம் ரூபாவும் பொம்மைவெளி வீதி முதலாம் குறுக்குத்தெரு தொடக்கம் ஒன்பதாம் குறுக்குவரையான வீதிகளுக்கு 2 கோடியே 20 இலட்சம் ரூபாவும் மீராப்பிள்ளை அவனியு மற்றும் சின்னப் பள்ளிவாசல் வீதிக்கு 20 இலட்சம் ரூபாவும் முஸ்லிம் நவீன சந்தைக் கட்டடத்திற்கு 80 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் இதற்கான பயனாளிகள் தெரிவு தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)




# லூர்து மாதா ஆலய வருடாந்த திருவிழா

மட்டுவில் வடக்கு லூர்து மாதா ஆலய வருடாந்த திருவிழா திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

# நிறுவுனர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் அருணாசல மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிறுவுனர் நினைவுப் பேருரையை உளவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கா. சிவயோகன் நிகழ்த்தவுள்ளார்.

கல்லூரியின் தாமோதரன் சஞ்சிகையின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-3-29)

# வைத்தியசாலை விடுதி அமைக்க இரண்டரைக் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி பிராந்திய வைத்தியசாலைக்கு விடுதி அமைக்க வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் இரண்டரைக் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இவ்விடுதி பொருளாதார அபிவிருத்தியமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் இப்பகுதியில் 4 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் 1 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (ஸ்ரீ-3-10)

# கட்டுமரத்திலிருந்து கடலில் தூக்கி வீசப்பட்ட மீனவர் படுகாயம்

(குடவெட்டி)

வடமராட்சி கிழக்கு, தாழையடி கடற்பரப்பில் மீனவர் ஒருவர் கட்டுமரத்திலிருந்து கடலில் தூக்கி வீசப்பட்டதில் பலத்த காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கொடிகாமம் இராமநாதன் மீள் குடியேற்ற முகாமில் வசித்துவரும் இரு மீனவர்கள் சம்பவதினம் கட்டுமரத்தில் கடற்றொழிலுக்குச் சென்றனர். ஆழ்கடலில் அதிக காற்று வீசியமையால் ஒரு மீனவர் கடலில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்து மயக்கமுற்று நீரில் மூழ்கியவேளை சக மீனவரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் அந்தோனிப்பிள்ளை எடிசன் (வயது -49) என்ற மீனவரே பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்றுவருகிறார். (ஸ்ரீ-3-24)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(பொலிகண்டி)

பொலிகண்டி பியலம்பற்றை ஸ்ரீ வீரபத்திரர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சிவராஜக்குருக்கள், பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக் குருக்கள், பிரேமச்சந்திரக் குருக்கள், ஸ்ரீதரக்குருக்கள், ரவீந்திரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர். மேலும் சிற்பாச்சாரியார்களை கௌரவிக்கும் நிகழ்வும் நண்பகல் 12 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3-48)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(அல்வாய்)

யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கி.கிருஸ்ணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கரவெட்டிக்கோட்ட கல்விப்பணிப்பாளர் த.தபேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரணவாய் கிராம அலுவலர் த.புவனேந்திரன், நலன் விரும்பி கி.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் திருமதி மதிவதனி தபேந்திரராஜா பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

✠✠✠

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-29)

✠✠✠

(அல்வாய்)


வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல- மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் மா. நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி வே.கமலநாதன், தொழிலதிபர் ஐ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# தென்மராட்சி குருவிக்காடு சூழல் சுற்றுலா பிரதேசமாகப் பேணப்படல் வேண்டும்

## சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



தென்மராட்சி சரசாலை வடக்கில் அமைந்துள்ள குருவிக்காடு தில்லை மரங்கள் அடர்ந்த ஒரு சதுப்பு நிலக்காடு. முழங்காலுக்கும் மேலாகத் தண்ணீரைக் கொண்டுள்ள குருவிக்காட்டில் பெயருக்கு ஏற்றாற் போலப் பெருவாரியாக நீர்ப்பறவைகள் வந்து தங்கி இனப்பெருக்கம் செய்கின்றன. வனப்பும்செழிப்பும் மிக்க இதன் அருமை பெருமை தெரியாமல் விறகுக்காக வெட்டி அழித்து வருகிறோம். இவற்றை உடனடி யாக நிறுத்தி குருவிக்காடு சூழல் சுற்றுலாப் பிரதேசமாகப் பேணப்படல் வேண்டும் என்று சூழலியலாளரும் இயற்கை, பண்பாட்டு மரபு வளப்பேணுகை மையத்தின் (இமை) தலைவருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 2ஆம் திகதி சர்வதேச ரீதியாக உலக ஈரநிலங்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனையொட்டி அன்றைய தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ். குடாநாட்டின் ஈர நிலங்களில் குருவிக்காடு குறிப்பிடத்தக்கது. அங்கு அண்மையில் நான் கள ஆய்வில் ஈடுபட்டபோது தில்லை மரங்களில் கைக்கெட்டிய தூரங்களில் எல்லாம் பறவைக் கூடுகளையும் அவற்றில் குஞ்சுகளையும் பார்த்தேன். அரிவாள் சொண்டன், நீர்க்காகம், நத்தைகுத்தி, நாரை போன்ற பறவைகளை அதிக எண்ணிக்கையில் காணக் கூடியதாக இருந்தது.

ஊர்வன ஆய்வாளர் ரோம் விட்டேகர் யாழ்ப்பாணத்து நீர்நிலைகளில் 1977ஆம் ஆண்டு ஆய்வுகளை மேற்கொண்ட போது முதலைகள் இருப்பது பதிவாகவில்லை. ஆனால் குருவிக்காட்டில் இப்போது சதுப்பு முதலைகள் கணிசமான எண்ணிக்கையில் குடியேறியிருக்கின்றன. குருவிக்காடு பறவைகளினதும் மீன்களினதும் இனப் பெருக்க மையமாகத் திகழ்வதோடு மழை காலங்களில் நீரைத் தேக்கி வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துகிறது. மண்ணரிப்பைத் தடை செய்கிறது.



தென் மராட்சிப் பிரதேசத்துக்கு இயற்கை அன்னையின் பாரிய சிறு நீரகமாக நீரை வடிகட்டி நன்னீராக்கிக் கொடுக்கிறது.

ஆனால் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்தும் குருவிக்காடு பயனற்ற ஒரு சேற்று நிலமாகவே பொதுப் புத்தியில் உறைந்து போய் இருக்கிறது.

போருக்குப் பின்னர் தினமும் ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் குடாநாட்டுக்குள் வந்து போகின்றார்கள். இவர்களின் வருகையை ஊக்குவிக்கும் பொருட்டு நட்சத்திர விடுதிகள் அமைப்பதற்குக் கால்கோள் விழாக்கள் நடைபெறுகின்றன. பயணிகளுக்கு எந்த வகையான இன்பத்தை நாம் வழங்கப் போகிறோம் என்பதைத் தீர்மானிக்காவிட்டால் எமது பண்பாட்டுச் சூழலும் இயற்கைச் சூழலும் சேர்ந்தே அழியும்.

குடாநாட்டில் சுற்றுலா சூழல் சுற்றுலாவாகவே -Eco Tourism ஊக்கு விக்கப்பட வேண்டும்.

இத்தகைய சுற்றுலா மையங்களில் ஒன்றாவதற்கு, கண்டுகளிப்பதற்கு குருவிக்காடு போதிய தகுதியைப் பெற்றிருக்கிறது. இதனைச் சூழல் சுற்றுலா மையமாகப் பேணும் போது எமது இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படுவதோடு கிடைக்கும் வருவாயைப் பயன் படுத்தித் தென்மராட்சியை அபிவிருத்தியும் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ)

# சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் ஆரம்பம்

## நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இதுவரை கிடைக்கப் பெற்ற சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகளை கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வடக்கு -கிழக்குப் பகுதிகளிலிருந்து சுமார் ஐயாயிரம் எழுத்து மூல சாட்சியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுமார் 500 பேர் வாய் மூலம் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியங்களை ஆய்வு செய்த பின் தேவை ஏற்படின் பொது மக்களிடம் இரண்டாம் கட்ட சாட்சியம் பெற்றுக் கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற அமர்வுகளில் சுமார் 200 பேர் சாட்சியமளித்துள்ளதுடன் புலம் பெயர் தமிழர்கள் ஐந்து பேர் வரை சாட்சியமளித்துள்ளனர் என்றும் கொழும்பில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணி கள் கடந்த 31ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு அதன் பணிகளை எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதியுடன் முடித்துக்கொள்ள வேண்டும். அதற்கு முன்னதாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கே.பி.அரசியலில் ஈடுபடுகின்றமை ஐ.தே.கவுக்கு பிரச்சினை அல்ல

## கரு அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகராக இருந்த குமரன் பத்மநாதன் ஜனநாயக அரசியலில் ஈடுபடுகின்றமையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு எவ்வித மான பிரச்சினையும் கிடையாது என்று அக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பயங்கரவாதத்தை தோற்கடிக்கின்றமையில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய முன்னாள் இராணுவ தளபதி கைதியாக சிறையில் உள்ளார். கே.பி. போன்றவர்களோ அரசிய லில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றார். (ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு புதிய விதிகள் அறிமுகம்

(கொழும்பு)

பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் சகல வாகனங்களும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுமதியை பெற்றிருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


இதில் 125 வான்களுக்கு அனுமதிகள் முன்னோடி அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த அனுமதிகள் வாகனத்தின் பின் பக்கத்தில் எப்போதும் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அவ் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கறுப்புக் கண்ணாடிகள் அல்லது திரையுள்ள வாகனங்கள் இவ்வனுமதியிலிருந்து விலக்கப்பட்டவையாகும்.

இது தொடர்பான சட்ட ஒழுங்குகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமென அதிகார சபையின் தலைவர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வாகனங்களின் சாரதிகளுக்கு சீருடையைக் கட்டாயமாக்குவது பற்றியும் விசேட வாகனங்களை இறக்குமதி செய்வது பற்றியும் யோசித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


(ஸ்ரீ-2)







யூனியன் அஷ்யூரன்சினால் கோப்பாய் வெள்ளெருப்பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியில் அண்மையில் சித்திரப்போட்டி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் விற்பனை முகாமையாளர் கோ.ஸ்ரீவரதன் சிறுவர்களுக்கான காப்புறுதித் திட்ட விளக்கவுரையை வழங்குவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழை பிராந்திய முகாமையாளர் என். சுகுணன் வழங்குவதையும் கலந்துகொண்ட முன்பள்ளிச் சிறார்களையும் படங்களில் காணலாம்.




# மீன்பாடும் தேன்நாட்டில் நடந்த வாழும் கலையின் தமிழ்வேதயாகம்

"குரு இல்லா வித்தை பாழ்" என்பர் எம்மூத்தோர்.

*"தெளிவு குருவின் திரு மேனி காண்டல்*
*தெளிவு குருவின் திரு நாமஞ் செப்பல்..."*

**ஆன்மீக குரு பரம பூஜ்ஜ ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இவ்வருடம் 22.01.2011 அன்று வருகைதந்தபோது, மட்டக்களப்பு முற்றவெளியில் அரங்கேறிய நிகழ்வுகள் பல்லாயிரம் மக்களை மெய்மறக்கச் செய்தன.**

என்று திருமந்திரம் செப்பும். அறியாமை இருளை நீக்கி மருளைப் போக்கித் தெளிவை ஏற்படுத்துபவர்



குரு ஆவார். இந்து இலக்கியங்கள் அறிவைப் பெறக் குருவை நாடிச் சென்று தங்கியிருந்து சேவை செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றன.

ஆனால் இன்று பூகோளமய மாயையில் சிக்கித்தவிக்கும் உலகமக்கள், தொழிநுட்பத்துடன் போட்டிபோட்டுத் தம்மைப்பற்றித் தாமே கவனிக்க நேரமற்று நவீன உணவுப் பழக்கவழக்கங்கட்கு உட்பட்டு மன, உள நோய்களுக்கு ஆட்பட்டு மிகவேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர். இதனால் ஆன்மீக தாகமோ, தன்னம்பிக்கையோ அற்றுள்ள மக்கள் குருகுலத்தையோ குருவையோ நாடிச் செல்லும் நிலையிலில்லை.

ஆகவேதான் நவீன வேதியல் விஞ்ஞானியும் வாழும் கலை அமைப்பின் நிறுவுநருமான ஆன்மீகக் குரு பரம பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் உலக மக்கள் அனைவரையும் நாடி, தானே நேரிற் சென்று "சுதர்சன் கிரியா" என்னும் தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட எளிய சுவாசப் பயிற்சியினை அளித்தும் தன்னார்வத் தொண்டர்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியும் 160இற்கும் மேற்பட்ட நாடுகளில் பெருமாற்றத்தினை ஏற்படுத்தி வருகின்றார்.

இவ்வகையில் மானிடநேயம் கொண்ட குருஜி அவர்கள் தமது அமைப்பினது சேவையின் 30 வது ஆண்டான இவ்வாண்டில் 22.01.2011 அன்று இலங்கையின் கிழக்கு மாவட்டத்தில் அமைந்துள்ள மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பிற்கு வருகைதந்தமை குறிப்பிடத்தக்கது.

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்துள்ள மட்டக்களப்பு மண் ஆன்மீகத்திலும் சளைத்ததல்ல. நகர மத்தியில் பரந்து விரிந்த அந்த முற்ற

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி தந்த ஆன்மீகப் பெரும்பேறு

வெளி மைதானம், அடுக்கடுக்காய் வானுயர்ந்த கம்பங்கள் சீரான இடைவெளியில் கம்பீரமாகக் காட்சியளிக்க, வந்தாரை வரவேற்க நந்திக் கொடிகள் தென்றலில் சிந்து பாடி அசைந்தன.

மின்னொளியில் மின்னிக்கொண்டிருக்கும் பரந்து விரிந்த மைதானத்தின் ஒரு பகுதியில் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையும் விசாலமாகவே காணப்பட்டது. மேடையின் நடுவே அழகிய வெண்பதாதை ஒன்று உலக சமாதானம் மற்றும் ஒற்றுமைக்காக 21 ஸ்ரீஸ்ரீ ஆயிரம் மக்கள் இணைந்து வேத பாராயணம் எனும் செய்தியைப் பறை சாற்றிக்கொண்டிருந்தது.

மதியம் மப்பும் மந்தாரமுமாக இருந்தாலும் பிற்பகல் அண்மிக்கும் போது செங்கதிரோன் சிரித்து மகிழ்ந்தான். மெல்ல மெல்ல மக்கள் மைதானத்தில் கூடினர். மக்களை ஆற்றுப்படுத்த வெண்ணிற ஆடைகளுடன் தொண்டர்கள் ஆங்காங்கே காணப்பட்டனர். வரிசை வரிசையாய் ஊர்திகள் அரங்கை நோக்கி யசைந்து வந்தன. இவற்றின் முன் கட்டப்பட்ட பதாகைகள்அவை கண்டி, ஹற்றன், நுவரெலியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், பூநகரி, வவுனியா, வெல்லவாயா முதலிய இடங்களில் இருந்து வந்ததை அறிவித்தன.


மைதானம் அண்ணளவாக 50 ஆயிரம் மக்களால் நிரம்பி வழிந்தது. மணி பிற்பகல் 3 ஐ அண்மிக்கவும் "குரு ஓம்..." பாடல் எமதுள்ளத்தை நிரப்பியவேளை குருஜியின் பிரசன்னத்தை மேடையில் காணக்கூடியதாக இருந்தது.

குருஜியின் பிரசன்னத்துடன் வேத பாராயணம் வானளாவ ஒலிக்க அந்தணச் சிவாசாரி யார்கள் 'மகாருத்ர' பூசையினை ஆற்றினார்கள். இவ்வேளை ஐந்து கருடன்கள் ஆகாயத்தில் வட்டமிட்டுச் கொண்டிருந்ததை அடியவர்கள் தமமுள் பேசிக்கொண்டிருந்தனர்.

நால்வேத சமர்ப்பணத்தைத் தொடர்ந்து "அங்கமும் வேதமும்..." எனத் தொடங்கும் தமிழ் வேதத்தைப் பாடசாலைப் பிள்ளைகள், பக்தர்கள் என 21 ஆயிரம் பேர் ஒருசேர ஒரே குரலில் பாராயணம் செய்தமை மனதைப் பண்படுத்துவதாக அமைந்திருந்தது.



இதனைத் தொடர்ந்து உலகமாதேவியிடமே ஞானப்பாலுண்ட ஞான சம்பந்தர் 'புறநீர்மை' பண்ணில் இராமேஸ்வரத்திலிருந்து திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது பாடியருளிய "நிரை கழலரவஞ் சிலம்பொலி



அலம்பும்..." எனும் தமிழ் வேதமும் திருவங்க மாலையிலிருந்து தலை, கண், நெஞ்சு ஆகிய பாகங்கட்குரிய பாடல்களும் பாடப்பட்டமை பரவசத்தினை ஏற்படுத்தியது.


இந்நிகழ்வில் பொதுமக்கள், பாடசாலைப் பிள்ளைகள் மட்டுமன்றி அரசியற் பிரமுகர்களும் கலந்து கொண்டமையைக் காணக் கூடியதாகவிருந்தது.

திட்டமிட்டபடி, கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் 21 ஆயிரம் மக்கள் ஒரேமேடையில் வேத பாராயணஞ் செய்தமை உள்ளத்தை உருக்குவதாகவேயுள்ளது. ஆகையால், இதனை 'வாழும் கலையின் தமிழ் வேத வேள்வி யெனில் அது மிகையில்லை.

கே.செந்தில்குமரன்,
வாழுங்கலை ஆசிரியர்,
யாழ்ப்பாணம்.

# கள்ளிக்காட்டு இதிகாசம்

32



கவிப்பேரரசு வைரமுத்து

"என்னாப்பா... இந்நேரம் இங்கிட்டு...?" - அவனை அடையாளங்கண்டு ஆச்சரியப்பட்டுக்கேட்ட வெட்டியான் தொத்தனைப் பதற்றத்தோடு பார்த்தான் மொக்கராசு.

வெட்டியான் தொத்தன் நல்லா வெளஞ்ச ஆளு. வயசு எம்பதுக்குக் கொறையாது. ஆனா கட்டையுங் குட்டையுமா இருப்பதால வயசு தெரியாது. தரை தெரியாமப் படந்து நிக்கிற சுடுகாட்டுச்செடி மாதிரி, தொத்தன் மூஞ்சிய மூடிமறைச்சிருந்தது தாடி மீசையெல்லாம்.

கண்ணு ரெண்டு மட்டும் பளிச்சுன்னு இருக்கும் பளிங்கான் குண்டு மாதிரி. "எங்கயும் போங்கடி கடைசில எங்கிட்டத்தான வந்தாகணும்"ங்கற வைராக்கியத்தில் முறுக்கி நிக்கிற ஒடம்பு. துவைச்சா அழுக்குப் போயிரும்-அழுக்குப்போனா பலம் போயிரும்- பலம்போனாக் கிழிஞ்சுபோயிருங்கிற மாதிரி ஒரு நாலுமுழ வேட்டி. ஒரு காலத்துல அது வெள்ளவேட்டிதான்னு சாமியே வந்து இன்னிக்குச் சத்தியம் பண்ணுனாலும் அத மனுசன் நம்பமாட்டான். அதுல நாயுருவிமுள்ளு வேற ச(டை)ட ச(டை)டயா ஒட்டிக்கிட்டு 'வசதியான எடத்துக்கு வந்திட்டமில்ல' என்றன. தொத்தன் உயரத்துக்கும் சொல்லுக்கும் கட்டுப்படுவது மாதிரி ஒரு நாலடி உயரக்கம்பு. மேல்சட்டை கெடையாது; ஒரே ஒரு துண்டு.

தொத்தன் கேட்ட கேள்விக்கு உண்மை சொல்லலாமா மழுப்பலாமா என்று யோசித்து, வந்தகாரியம் முடியவேண்டுமானால் இனி உண்மை சொல்லித்தான் ஆக வேண்டும் என்று முடிவுசெய்து, 'ஒரு எலும்பு தேடி வந்தேன்'என்று இழுத்தான் மொக்கராசு.

"எலும்பா...? எதுக்கு?"

-தொத்தனின் ஆச்சரியம் தாடி மீசை தாண்டிக் குதித்தது.

"மருந்துக்கு... எம் மாமனுக்கு."

"மருந்தா? மனுச எலும்புல என்னா மருந்து?"

"அது என்னமோ தெரியாது. மாமந்தான் கேட்டுச்சு"

"மனுச எலும்புல என்ன மருந்தோ... என்ன மாயமோ... அதுசரி இப்ப எலும்புக்கு எங்க போறது? முந்தாநாளுதான் நாட்டாமை அவுக அப்பன் நல்ல கருப்பன் பெரியாம்பள - இப்பவோ பெறகோன்னு இழுத்துக்கிட்டுக் கெடக்குதுன்னு சுடுகாட்டச் சுத்தம் செஞ்சாக, சுடுகாடு சுத்தமாயிருச்சு; பெருசு பொழச்சுக்கிருச்சு. இப்ப எலும்பு வேணும்னா என் எலும்பத்தான் ஒடிச்சுக் குடுக்கணும். இல்லாட்டி எரியிற பொணத்துலயிருந்து எடுத்துக் குடுக்கணும்."

தூரத்தில் தகரக் கொட்டகையில் ஒரு பிணம் பொசு பொசுவென்று புகைந்துகொண்டிருந்தது.

"யாரு?" என்றான் மொக்கராசு திகைத்தவனாய்.

"நம்ம பிச்சை..." என்ற வெட்டியானின் குரலில் எந்த உணர்ச்சியுமில்லை.

"பிச்சையா... சல்லிக்கட்டு மாடு பிடிப்பாரே அந்தப் பிச்சையா!"

"அதே பிச்சைதானப்பா. கொம்புக்குத் தப்பிச்ச ஆளுகொமரிக்குத் தப்பிக்கல... என்னமோ பொம்பள வெவகாரம். புளியமரத்துல நான்டுக்கிட்டுச் செத்துப் போய்ட்டாரு. என்னிய எரிக்கச் சொல்லிப்பிட்டு இப்பத்தான் எல்லாம் போகுதுக. நல்ல சாவுன்னா நாளைக்கி எலும்பு கேப்பாக... பால் தெளிப்பாக. இது நான்டுக்கிட்டுத் செத்த சாவு. செய்றதச் செஞ்சுக்கப்பான்னு சொல்லிப்பிட்டுப் போறவுக போயிட்டாக."

பேசிக் கொண்டே தொத்தனும் மொக்கராசும் பிணத்தருகே வந்தார்கள். வச்ச தீயிலும் தொத்தனின் அறுபது வருச அனுபவத்திலும் அந்தப் பிணம் ஏகபோகமாக எரிந்துகொண்டிருந்தது. மனுசன எரிக்கிறது எப்படின்னு தொத்தன் ஒண்ணும் மனுசாஸ்திரம் படிக்கல. தீ வைக்கிறது எப்படின்னு திருக்குறள்லயும் சொல்லல. எல்லாம் வழிவழியா வந்த அனுபவம்தான்.

பொணம் எரிக்கத் தொத்தன் மொதல்ல வைக்கிறது மங்கலயந்தான். மங்கலயத்துக்குள்ள வைக்கிறது ஆமணக்கும் ஒடச்ச தேங்காயுந்தான். ஏந்தெரியுமா? ரெண்டுமே எண்ணெய்வித்து. மனுசக்கட்ட எரியணுமா இல்லையா?-மங்கலயத்துக்குமேல வேப்பங்கட்டையோ புளியங்கட்டையோ அடுக்கி அதுமேல தேகத்தைப் படுக்கவச்சு, எருவப் பரப்பி, கடைசிவறட்டியில மூஞ்சிய மூடி, அதுக்குமேல வைக்கலப்போட்டு, கையாலயே சாந்து பூசி மெழுகி, நாலு ஓட்டை போடணும் பொணம் நல்லா எரிய. நெஞ்சாங்குழியில ஒரு ஓட்ட. வயித்துப்பக்கம் ஒரு ஓட்ட. ஒவ்வொரு முழங்கால் பக்கமும் ஒவ்வொரு ஓட்ட. ஓம்போது ஓட்ட கொண்ட தேகத்தை எரிக்க நாலு ஓட்ட போதும். தலப்பக்கம் கொள்ளிவச்சா பொணம் எரிய எரிய நாலு ஓட்டையிலும் பொக வரும்.

மொக்கராசு மூக்கைப் பிடித்துக் கொண்டே எரியும் பிணத்தை வேடிக்கை பார்த்தான். பிணம் உள்ளே பீடிகுடிப்பது மாதிரி நான்கு ஓட்டையிலும் புகை லேசாய் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு ஓட்டை வழியாகவும் பழுதுகம்பியை விட்டுச் சோதிக்க அது இன்னும் வேகவில்லை என்று தெரிந்தது.

"ஒரு ஓரமா ஒக்காரு சாமி... வெந்து முடிக்க எடுத்துக் குடுத்திடறேன் எலும்ப. எதுக்கும் மசானம் கருப்பையாவையும் ஒரு வார்த்த கேட்டுக்கிடறேன்."

மயானத்தில் வேப்பமரத்துக்குக்கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட கல்லுச்சாமிதான் மசானம் கருப்பையா. வசதியில்லாத வறண்டசாமி. நெத்திப் பகுதியில் பூசப்பட்ட கும்குமமும் சந்தனமும் வண்டல் வண்டலாய்க் காய்ந்து அதன் இடுப்பில் கட்டப்பட்ட மஞ்சள் துணியில் திட்டுத்திட்டாய்ப் படிந்து கிடக்கும். எரிக்கும் பிணம் கிடைக்கும்போதுதான் அந்தச் சாமிக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்டும். எரியூட்டப் படுவதற்கு முன்னால் சாமியிடம் வெட்டியானின் சாங்கியம் நடக்கும். ஊதுவத்தி சூடம் கொளுத்தி, சந்தனம் கொழச்சு அப்பி, குங்குமம் இழுகி "சாமி! மசானம் கருப்பய்யா! கடமையைச் செய்யிறேன் சாமி... காத்துக் கருப்பு அண்டாமக் காப்பாத்து... தகிரியம் குடு"ன்னு கொழஞ்சு கும்பிட்ட அப்பறம் தான் பொணத் தோட தொடங்கும் வெட்டியானோட பொழப்பு.

சுடுகாட்ட ஏன் ஊருக்கு வடக்க வச்சாகன்ன, நம்மூர்ல தெக்கு வடக்காத்தான காத்தடிக்கிறது வழக்கம்! பொணம் வேகிற பொக ஊருக்குள்ள வராம அப்படியே ஓடிப்போகட்டும்னுதான் வடக்க வச்சிருக்காக சுடுகாட்ட.

மூஞ்சியில் புகையடிக்காத மாதிரி தெக்குப் பக்கமாய்-எரியும் பிணத்தின் தலைமாட்டில் உட்கார்ந்தார்கள் தொத்தனும் மொக்கராசும்.

நல்லா இருட்டிருச்சு,

"இன்னும் எம்புட்டு நேரம் ஆகும்?"

"சொல்ல முடியாதப்பா. அவுக அவுக நெஞ்சுக்கூட்ல என்ன நெனப்புல சாகுறாகளோ... அதப் பொறுத்துத்தான் வேகுறதும் வேகாததும்." பொணம் எரியிறவரைக்கும் இங்கேயேவா இருப்பீக?"

"முந்தியெல்லாம் கொள்ளிவச்சிட்டு வேகறதுக்குள்ள வீட்டுக்குப் போயிக் கஞ்சிகிஞ்சி குடிச்சிட்டு வருவோம். அதுல ஒரு வெவகாரம் வந்திருச்சில்ல."

"அது என்னா வெவகாரம்?"

"நாஞ்சொல்றது நாப்பது நாப்பத்தஞ்சு வருசத்தக்குமுன்ன. பெரியதனக்காரர் சம்சாரம் பேறுகாலத்துல செத்துப்போயிருச்சு. செத்துப் பெறந்த கொழந்தையும் கொழகொழன்னு கூழ்மாதிரியிருக்கு. ஆத்தாள அடியில கிடத்திப் பிள்ளைய நெஞ்சில பரப்பி இங்கதான்-இதே எடத்துலதான் கொள்ளி வச்சோம். எல்லோரும் போயிட்டாக, நானும் சகல சாங்கியமும் பண்ணிப்புட்டு தேகம் தீயில கனியட்டும் - ஒரு எட்டு வீட்டுக்குப் போய்ட்டு வந்திரலாம்னு போயிட்டுவந்து பாத்தா-பொணத்தக் காணோம்."

"எந்திரிச்சுப் போயிருச்சா?"

"பொணம் தானா எங்க போகப் போகுது? பொணத்த யாரோ இழுத்துட்டுப்போன தடம் மட்டும் தெரியுது. தடத்துவழியே தீபத்தப் புடிச்சுப் போனா பனையாங்காட்டு எலந்தம்புதருக்குக் கீழ வெறும் எலும்பாக் கெடக்கு. அந்தப் பக்கம் லேசா எட்டிப் பாத்தா பொணத்தக் 'கதக்வதக்' குன்னு தின்டுக்கிட்டிருக்கு ஒரு கழுதப்புலி. அப்ப நான் நல்ல வாலிபம். ஒடம்புல வேற திமிரு இருந்துச்சா கைக்கம்பெடுத்து ஏ கழுதைன்ன எறிஞ்சேனா இல்லையா - கண்காணாத காட்டுக்கு ஓடிப்போயிருச்சு கழுதப்புலி.

(வளரும்)



# இலங்கை மத்

# புதிய தொடர் நாணயத் தாள்கள் வெ

## அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வாழ்த்துச் செய்தி



'அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக்காரர்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் புதிய நாணயத்தாள் தொடர்களை வெளியிடுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். [illegible]

அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி, இலங்கை சோசலிசக் குடியரசு.

## இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் செய்தி



[illegible]

அஜித் நிவாட் கப்ரால்,
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

## துணை ஆ



இலங்கை மத்தியவங்கி, 195 வெளியிட்டதிலிருந்து அதன் நாண மிகவரவேற்கத்தக்கமுறையில் மேற் குறிக்கின்ற தொடர்ச்சியான நிகழ் புதிய தொடர்களை அறிமுகப்படுத்து நாணயத் தாள்களின் வெளியீடு ம தன்மையினையும் மேலும் மேம்படு

இலத்திரனியல் மற்றும் பாரி முகாமைத்துவம் வாய்ந்தகொடு பயன்பாட்டில் விரைவான வளர்ச்சிகாணப்பட்டபோதும், நா செய்வதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் முக்கிய இதனைப் பயன்படுத்துவது எப்பொழுதும் அதிகரித்தே விடியலுடன், 2009இன் நடுப்பகுதியிலிருந்து வடக்கு கிழ நீரோட்டத்திற்கு திரும்பியதுடன் தெளிவாகக் காணமுடிந்த துறைகளிலும் நகர்புறங்களின் சில்லறைச் சந்தை நட நடைபெற்றுவருகின்றன. ஆகவே, நாங்கள் நாணய வெ மிக முக்கியமானதொழிற்பாடாகவே நாம் கருதுகின்றோ எமது முயற்சியாக இருப்பதுடன், அந்த வகையில் நாணய வங்கியின் முயற்சிகளில் தலையாயதாகும்.

கே.ஜி.டி.

## இலங்கை மத்திய வங்கி நாணயங்களை வெளியிடுகின்றது

[illegible] பாதுகாக்கப்படுவதும் முக்கியமானதாகும். இது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு பங்களிப்பதுடன் இதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் கூட்டுகிறது. எனவே, இலங்கையில் நாணயத்தினை வழங்கும தொழிற்பாடுகளும் நாணயத்தினை முகாமைப்படுத்தும் தொழிற்பாடுகளும் இலங்கை மத்திய வங்கியிடம் வழங்கப்பட்டுள்ளன. இவ் வங்கி, நாட்டில் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கும் பொறுப்பாகவுள்ளது.

### நாணய வெளியீட்டிற்கான வரலாற்றுப் பின்னணி

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் கீழ் 1872இல் தசம நாணயக் குற்றிகள் அறிமுகப்படுத்தப்பட்டனவெனினும், 1892 ஒக்டோபரிலேயே அவை முழுமையான தொழிற்பாட்டிற்கு வந்தது. அப்பொழுது இலங்கையின் நாணயக் குற்றிகள் பிரித்தானிய இந்திய ரூபா, இலங்கை வெள்ளி நாணயங்கள் (-/50 சதம், -/25 சதம் மற்றும் -/10 சதம்) மற்றும் இலங்கை பித்தளை நாணயங்கள் (-/05 சதம், -/01 சதம், அரைச்சதம் மற்றும் காற் சதம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. நாணய வழங்கலானது, 1884ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க இலங்கை தாள் நாணய கட்டளைச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நாணய சபை முறையின் கீழ் நாணய ஆணையாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இக் கட்டளைச் சட்டம் ரூ. 5, ரூ. 10, ரூ. 50, ரூ.100, ரூ.500, ரூ.1,000 இனங்களில் அரச தாள் நாணயங்களை வெளியிடுவதற்கான அதிகாரங்களை வழங்கியது. இந் நாணயத் தாள்கள் எவரேனும் இரண்டு நாணய ஆணையாளர்களின் கையொப்பங்களைத் தாங்கியிருந்ததுடன் இத் தாள்கள் சட்ட ரீதியான அந்தஸ்தினையும் கொண்டிருந்தன. இக் கட்டளைச் சட்டம் போலி நாணயத் தாள்களுக்கு தண்டங்களை விதிக்கும் அதிகாரத்தினையும் கொண்டிருந்தது. தாள் நாணய கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 291) 1941 ஆம் ஆணடின் 21ஆம் இலக்க தாள் நாணயச் சட்டம் இயற்றப்பட்டதுடன் நீக்கப்பட்டது. இச் சட்டம் இலங்கை நாணய ஒழுங்குவிதிகளை வழங்கியது. இக் கட்டளைச் சட்டத்தின மூலம் இலங்கை ரூபா என்ற பெறுமதியின் நியம அலகு நிர்ணயிக்கப்பட்டது (இது நூறு அலகுகளாகப் பிரிக்கப்படக் கூடியதுடன் ஒவ்வொன்றும் ஒரு சதம் என அழைக்கப்பட்டது). இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து நாணயத் தாள்களும் இலங்கை அரசாங்கத்தின் பெயரில் இருந்திருத்தல் வேண்டும். இக் கட்டளைச் சடடம் தொழிற்பாட்டிற்கு வந்ததும் சுற்றோட்டத்திலிருந்த இந்தியா ரூபாவிற்கான சட்ட ரீதியான அந்தஸ்து நிறுத்தப்பட்டது. நாணயத் தாள்களைச் சிதைத்தல் அல்லது உருததிரிபு செய்தல் மற்றும் போலி நாணயத் தயாரிப்பு என்பனவும் இக் கட்டளைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன.



முன்பக்கம் பின்பக்கம்

இக் காலப்பகுதியில் நாணய ஆணையாளர் சபை, ஒப்பீட்டு ரீதியல் உயர்ந்த பெறுமதிகளைக் கொண்ட ரூ.500, ரூ.1,000 இன நாணயத் தாள்களை சுற்றோட்டத்திற்காக வெளியிட்டதெனினும் 1946இன் தொடக்கத்தில் இவை செல்லுபடியற்றதாக்கப்பட்டன. நாணய ஆணையாளர் சபையினால் வெளியிடப்பட்ட மிக உயர்ந்த பெறுமதி கொண்ட நாணய இனமாக ரூ.10,000 நாணயத் தாள் இருந்ததுடன் இது வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் நாணயச் சபையுடனான கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. நாணயத் தாள் மீதான திகதி 1947 ஒக்டோபர் 15 ஆகக் காணப்படுவதுடன் நாணய ஆணையாளர்களான சி.ஈ. ஜோன்ஸ் மற்றும் ரி.டி.பெரேரா ஆகியோரின் கையொப்பங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்ட 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்ட விதியின் ஏற்பாடுகளின் மூலம் 1941ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நாணயக் கட்டளைச் சட்டம் நீக்கப்பட்டது. எனினும் நாணயக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து நாணயத் தாள்கள் மற்றும் இலங்கை நாணயக் குற்றிகளும் சுற்றோட்டத்திலிருப்பவையும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்கள், குற்றிகள் போன்று இருந்ததுடன் வங்கி அதற்குப் பொறுப்பான தாகவும் இருந்தது. ஆகவே, 1950 இல் இலங்கை மத்திய வங்கி ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கும மேலாக வளர்ச்சியடைந்திருந்த நன்கமைந்த நாணய முறையொன்றினை வாரி சுரிமையாக பிரித்தானியாவிடமிருந்து பெற்றுக் கொண்டது.

இலங்கை மத்திய வங்கி அது ஆரம்பத்திலிருந்து வெளியிட்ட நாணயத் தாள்கள மற்றும் நாணயக் குற்றிகள் மற்றும் ஞாபகார்த்த நாணயத் தாள்கள் மற்றும் குறறிகள் என்பன, இலங்கையின் வரலாற்று மற்றும் கலாசாரம் பாரம்பரியங்களையும் அதன் மலர், செடி கொடிகளையும் நாட்டில் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்களையும் அபிவிருத்திகளையும் பிரதிபலிப்பனவாகவுள்ளன.

### இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்கள்

இலங்கை மத்திய வங்கி அதன் சொந்த நாணயங்களை அச்சிடத் தொடங்கும் வரை, அது நாணய ஆணையாளர் சபையிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்றுக் கொண்ட நாணய இருப்பிலிருந்து அவற்றை. வழங்கியது. 1952இல் இலங்கை மத்திய வங்கி அதன் முதலாவது நாணயத் தாள்களை அச்சிட்டு சுற்றோட்டத்திற்கு வெளியிடக் கூடியதாக இருந்த போதும, 1955 யூலை நடுப்பகுதியில் மட்டுமே ரூ.100 மற்றும் ரூ.50 தவிர்ந்த நாணய ஆணையாளர் சபையினால் வெளியிடப்பட்ட நாணயதாளுக்குப் பதிலாக இலங்கை மத்திய வங்கி விரும்பிய அதன் சொந்த நாணய வகைகளை சுற்றோட்டத்திற்கு விடக் கூடியதாக இருந்தது. ஆகவே 1955 ஒகஸ்டில் நாணய ஆணையாளர்களின் கையொப்பங்களுடன் கூடிய 1950.12.31 ஆம் திகதிக்கு முற்பட்ட ரூ.10 மற்றும் அதற்குக் குறைவான நாணயத் தாள்களை மீளப் பெற்றுக் கொண்டமையின் மூலம் இலங்கை மத்திய வங்கி நாணயத் தாள்களை செல்லுபடியற்றதாக்கும் முதலாவது நடவடிக்கையினை மேற்கொண்டது.

இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2011 வரை வெவ்வேறு ஆண்டுகளில் பதினொரு நாணயத் தாள் தொடர்களை வெளியிட்டிருக்கின்றது. இச் சிறப்பிதழின் அட்டவணை I தாள் தொடர்களின் தொனிப்பொருள், இன வகை, தாளில் அச்சிடப்பட்டவாறு முதலில் வெளியிடப்பட்ட ஆண்டு என்பனவற்றைத் தருகின்றது.

#### (1) ஏI ஆவது ஜோர்ச் மன்னரின் தொடர்கள்

பிரித்தானிய காலணித்துவத்தில் வெளியிடப்படும் நாணயத் தாள்களிலும் நாணயக் குற்றிகளிலும் பிரித்தானிய சாம்ராஜ்யத்தை ஆளுகின்றவரின் உருவத்தினைப் பொறிப்பது வழமையானதொன்றாகும். 1948இல் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியிலிருந்து மீண்டும் சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்ட பின்னரும் இலங்கை மத்திய வங்கி சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட அதன் முதலாவது நாணயத் தாளில் மேதகு மன்னர் ஏI ஆவது ஜோர்ச் மன்னரின் உருவப்படத்தினைப் பொறிப்பதனை தொடர்ந்தும் நடைமுறையில் கொண்டிருந்தது. முதலாவது நாணயத் தாள் ரூ.10 இன நாணயத் தாளாக இருந்ததுடன் நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முதலாவது ஆளுநர் ஜோன் எக்ஸ்ரர் ஆகியோரின் பொறிக்கப்பட்ட கையொப்பங்களுடன் 1951 ஜனவரி 20ஆம் திகதியிடப்பட்டு 1952.01.04ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு ரூபா நாணயத் தாள் வெளியிடப்பட்டது. முதலாவது தொடர் அச்சிலிருக்கும் பொழுது 1952.02.06ஆம் நாள் ஏI ஆவது ஜோர்ச் மன்னர் இறந்துவிட்டமையினால் ரூ.2, ரூ.5, ரூ.50 மற்றும் ரூ.100 இனத் தாள்கள் வெளியிடப்படவில்லை.

#### (2) II ஆவது எலிசபெத் மகாராணியின் தொடர்கள்



முன்பக்கம் பின்பக்கம்

1952இற்குப் பின்னர் வெளியிடப்பட்ட ரூ.1, ரூ. 2, ரூ. 5, ரூ.10, ரூ. 50 மற்றும் ரூ. 100 ஆகிய நாணய வகைகள், தந்தையாரான ஏI ஆவது ஜோர்ச் மன்னர் இறந்ததன் பின்னர் 1952 பெப்ரவரியில் ஐக்கிய இராச்சியத்தின் ஆட்சிக்கு வந்த II ஆவது, எலிசபெத் மகாராணியின் உருவத்தினைத் தாங்கியிருந்தன. தொடர் I மற்றும் II இல் உள்ள நாணயத் தாள்களின் முன்பக்கம் பிரித்தானிய ஆட்சியாளரின் உருவத்தினை கொண்டிருந்த போதும் தாள்களின் எஞ்சிய வடிவமைப்புக்கள் பணடைய இலங்கையின் கட்டட வடிவமைப்புக்களை உண்மையாக பிரதிபலிக்கின்ற பண்புகளைக் கொண்டிருந்தன. முக்கியமான பாதுகாப்புப் பண்பாக கட்டியச் சிங்கத்தின் நீர்வரி அடையாளம் காணப்பட்டதுடன் இது நாணய ஆணையாளர் சபையினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்களில் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது.

#### (3) இலங்கை அரச இலட்சினைத் தொடர்கள


1956ஆம் ஆண்டு, நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக விளங்கியதுடன் இம் மாற்றங்கள் நாணயத் தாள்களின் 3ஆவது தொடர்களில் பிரதிபலிக்கப்பட்டன. இவற்றில், தாளின் மீதான சாசனம் (அதாவது இலங்கை மத்திய வங்கி, சட்ட ரீதியான அந்தஸ்து பற்றிய எழுத்துரை தாளின் முகப்புப் பெறுமதி) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மாற்றப்பட்டதுடன் தாளின் இன வகை மட்டும் சிங்களத்திற்குப் புறம்பாக, தமழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டது. இத் தொடர்கள் நாணயத் தாள்களின் மீது காணபபட்ட பிரித்தானிய ஆட்சியாளரின் உருவப்படத்தினை அகற்றுவதன் மூலம் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த நிலையினை பிரதிபலிக்கின்ற முதலாவது தொடர்களாக விளங்கின. பிரித்தானிய ஆட்சியாளரின் உருவம் பொறிக்கப்பட்டமைக்குப் பதிலாக தாளின் முன்பக்கத்தில் இலங்கையின் அரச இலட்சினை பொறிக்கப்பட்டது.

#### (4) எஸ்.டபிள்யு,ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவம் பொறிக்கப்பட்ட தொடர்கள்

1962இல் வெளியிடப்பட்ட புதிய தொடர்களின் தாள், 1959 செத்தெம்பரில் கொலை செய்யப்பட்ட பிரதம மந்திரி காலம் சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவப் படம் பொறிக்கப்பட்ட முதலாவது தாளாகக் காணப்பட்டது. எண்ணும் பொழுது தாள்களை பரீட்சிப்பதனையும் பழைய தாள்களிலிருந்து புதிய தாள்களை வேறுபடுத்துவதனையும் வசதிப்படுத்துவதற்காக தாளின் வலதுபக்கத்தில் உருவப்படமும் தாளின் இடதுபக்கத்தில் நீர்வரி அடையாளமும் காணப்பட்டன.

#### 5) பராக்கிரமபாகு மன்னரின் நாணயத் தொடர்கள்

1965இல் இலங்கை மத்திய வங்கி அனைத்து வங்கித் தாள்களிலும் காணப்பட்ட உருவப்படங்களுக்குப் பதிலாக பராக்கிரமபாகு மன்னரின் (கி.பி. 1153–1186) சிலையுடன் கூடிய புதிய தொடர்களை வெளியிட்டது. இம் மாற்றங்களைத் தவிர, தொடரின் முக கிய பண்புகள் ஓரளவிற்கு முன்னுள்ளவை போன்றே காணப்பட்டன. எனினும், 1969 இலிருந்து அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட நாணயத் தாள்களில் சிங்களத்தில் மட்டும் காணப்பட்ட "இலங்கை மத்திய வங்கி" என்ற



முன்பக்கம் பின்பக்கம்

இரண்டாவது செல்

1970ஆம் ஆண்டின்26ஆம் இலக்க வரிதவிர்த்த தாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. 197 க்டோ ரூ.100 மற்றும் ரூ.50 இன நாணயத் தாள்கள் 1970 அற்ற தாக்கப்பட்டன. செல்லுபடியற்றதாக்கல் நடவடிக் 1970 ஒக்டோபர் 26ஆம் திகதியிடப்பட்ட புதிய நாணய மபாகு மன்னரின் சிலைக்குப் பதிலாக மறைந்த உயர்த்தப்பட்ட உருவம் வடிவமைப்பில் சில மாற்ற இலங்கை மத்திய வங்கியின் தனியான தொடராகச் உருவப்படத் தொடராகவே கருதப்பட்டது.


#### (6) இலங்கை அரச இலட்சினைத் தொட

1972 மே 22ஆம் திகதி உருவாக்கப்பட்ட புதிய மீளப் பெயரிடப்பட்ட பொழுது இலங்கை அரசாங்க அரச இலட்சினையின் மூலம் பிரதம மந்திரி எஸ். அகற்றப்பட்டது. இம் மாற்றம் ரூ.50 மற்றும் ரூ.10

#### (7) மலர்ச்செடிகள் மற்றும் கொடிகளை

1979இல் வெளியிடப்பட்ட 7ஆவது நாணயத் தொ பில் பெரும் மாற்றமொன்றினை மேற்கொண்டது. இ அன்ட் கோ இனால் பணிக்கு அமர்த்தப்பட்ட இல அனைத்து இன நாணயங்களிலுமுள்ள வடிவமைப் வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் மீன்கள் அவை வள களுக்கு மாற்றப்பட்டன. ரூ.10 மற்றும் ரூ. 5 இன கடைந்து சுற்றோட்டத்திற்கு தகுதியற்றனவாக மா புதிய இன நாணயத் தாள் அறிமுகப்படுத்தப்பட்ட

முன்பக்கம்



#### (8) வரலாற்று மற்றும் தொல்

198)இல் இலங்கை மத்திய வங்கியின் 8ஆவது அனைத்து நாணய வடிவமைப்புக்களும் வரலாற்று ரூ.1,000 இனத் தாள், முன்பக்கத்தில் மகாவலித் தி பின்பக்கத்தில் கந்தளாய் நீர்த்தேக்கத்தின் விம்ப மத்திய வங்கி முதற்றடவையாக அதிகரித்தளவி தாளகளின் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கா ரூ.500 மற்றும் ரூ.1,000 இனை வெளியிட்டது.

#### (9) வரலாறு மற்றும் அபிவிருத்

1987இல் வெளியிடப்பட்ட இத் தொடர்கள் மே ரூ.1,)00 மற்றும் ரூ.500 இன நாணயத் தாள்களை மட் தந்தக் கோவிலிலிருந்தான கற்சிற்பம், அபயகிரி தூப வற்றின் தோற்றங்களை உள்ளடக்கியிருந்தது. முத of Ceylon" என்ற சொற்களுக்குப் பதிலாக "Centra

#### (10) இலங்கை பாரம்பரியத் தொ

1991இல் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட தற்பே பட்டதுடன் இலங்கையின் பாரம்பரியங்களை எடுத்துக் இன நாணயத் தாள்களும்). மத்திய பகுதி ன் செயற்கை பொருள், நடனம் மற்றும் மேளகாரர்கள் பௌத்த தூபிகள், கண்டி புனித தந்தக் கோயில், பாரமபரிய முறையில் ஊன்று கோலில் இருந்து மீ வறறை உள்ளடக்கியிருக்கிறது. இத் தாள்கள் உய அதனைத் தொடர்ந்து வந்த மீள அச்சிடப்பட்ட உய உள்ளடக்கியிருந்தன. 2005இல் இலங்கை மத்திய சுற்றோட்டத்திற்கு விட்டதுடன் இத் தாளின் மீது மே ஒன்றான சிகிரிய கோட்டை அரண் பொறிக்கப்பட்டிருந்

#### (11) அபிவிருத்தி, சுபீட்சம் மற்

இலங்கை மத்திய வங்கி "அபிவிருத்தி, சுபீட்ச பொருளில் அதன் 11 ஆவது புதிய நாணயத் தொ இத் தொடர்கள் 20 ஆண்டு காலங்களின் பின்னர் கியுளளது. இத் தொடர்களில் அறிமுகப்படுத்தப்பட பட்டதன் பின்னர் அது வெளியிடும் மிக உயர்ந்த நாணயத் தாள் இத் தொடர்களுடன் வெளியிடப்படமா டத்திற்கு விடப்பட்டுள்ளமையினால் இலங்கை மத் வெளியிடமாட்டாது. எனினும் இலங்கை மத்திய வங் நாணயத் தாள்களும் தொடர்ந்தும் சட்ட ரீதியான கொடுப்பனவிற்கும் செல்லுபடியானதாகும்.

**இலங்கை மத்திய வங்கியினால் வெளியிட**

பணச் சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் அது -/10 சதம், -/5 சதம், -/2 சதம், -/)1 சதம் என்பன புக்களை கொள்ள பட்டது. நிறைவி குறிக்கி ஞாபகா வார்க்க யிடப்பட் இலங்க நாணய



முன்பக்கம் பின்பக்கம்

CENTRAL BANK OF SRI LANKA
60 growth & stability


# இலங்கை மத்திய வங்கி

## புதிய நாணயத்தாள் தொடர்களை 2011 பெப்புருவரி 04இல் வெளியிடுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது

# புதிய நாணயத்தாள் தொடர்கள்

புதிய நாணயத்தாள் தொடர்கள் அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள் என்ற தொனிப்பொருளையும் இலங்கையில் காணப்படக்கூடிய பறவைகள் மற்றும் வண்ணத்துப்பூச்சிகள் போன்றவற்றையும் முக்கியப் பண்புகளாகக் கொண்டுள்ளது.

ரு. 5,000 முன்பக்கம்



ரு. 1,000 முன்பக்கம்



ரு. 500 முன்பக்கம்



ரு. 100 முன்பக்கம்



ரு. 50 முன்பக்கம்



ரு. 20 முன்பக்கம்



ரு. 5,000 பின்பக்கம்



153 x 67 மிமீ

ரு. 1,000 பின்பக்கம்




148 x 67 மிமீ

ரு. 500 பின்பக்கம்



143 x 67 மிமீ

ரு. 100 பின்பக்கம்



138 x 67 மிமீ

ரு. 50 பின்பக்கம்



133 x 67 மிமீ

ரு. 20 பின்பக்கம்



128 x 67 மிமீ

இவ் நாணயத்தாள்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

1. நீர் வரி அடையாளம்



2. பாதுகாப்பு நூல்



3. மூலைக்கல்




4. தெளிவாகப் பார்த்தல்



5. மேலதிக சிறிய எழுத்துரை



6. பார்வையற்றவர்களும் அறியக் கூடிய பண்பு



7. மேற்கிளம்பிய அச்சிடல் பரப்பு




1. நீர்வரி அடையாளம்

ஒவ்வொரு நாணயத்தாளினதும் நீர்வரி அடையாளமாக வெவ்வேறுபட்ட உள்நூர் பறவைகளின் தோற்றம் காணப்படுவதுடன் இதே பறவையே தாளிலும் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பெறுமதி தெளிவான நீர்வரி அடையாளமாக இலக்கங்களில் நிலைக்குத்தாகக் காணப்படுகிறது.

2. பாதுகாப்பு நூல்

பாதுகாப்பு நூல்கள் நாணயத்தாள் ஒவ்வொன்றிற்குமிடையில் வேறுபடுகின்றதுடன் இ.ம. வங்கி என்ற எழுத்துக்களும் பெறுமதியும் அதில் காணப்படுகின்றன. உ-ம் ரூ.20, ரூ.100

சிவப்பிலிருந்து பச்சைக்கு மாற்றமடைகின்ற விதத்தில் யன்னல் வடிவில் காணப்படும் ஸ்டார் குறோமின் ® அகலம் ரூ.5,000, ரூ.1,000 மற்றும் ரூ.500 நாணயத் தாள்களில் முறையே 3 மிமீ, 2.5 மிமீ, 2 மிமீ ஆகக் காணப்படுகிறது.

ரூ.100, ரூ.50 மற்றும் ரூ.20 தாள்களிலுள்ள நூலானது நாணயத்தாள்களில் பதிக்கப்பட்டிருக்கிறது.

3. மூலைக் கல் ®

மூலைக் கல் ® நீர்வரி அடையாளமானது நாணயத்தாளின் ஒவ்வொரு மூலைகளிலுமுள்ள மூலைவிட்டச் சட்டங்களின் வடிவில் காணப்படுகிறது.

4. வெளிச்சத்தினூடாகப் பார்த்தல்

தாளினை வெளிச்சத்தில் பிடித்துப் பார்க்கும் பொழுது தாளின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் உள்ள பெறுமதி இலக்கங்கள் ஒன்றுடன் ஒன்று கச்சிதமாக பொருந்துவதனைக் காண்பீர்கள்.

5. மேலதிகமான சிறிய எழுத்துரை

மிக நெருக்கமாகப் பார்க்கும் பொழுது இலங்கை மத்திய வங்கி மற்றும் பெறுமதி என்பனவற்றை பார்க்கக்கூடியதாயிருக்கும்.

6. பார்வையற்றவர்களும் அறியக்கூடிய பண்பு

பார்வை பாதிக்கப்பட்டவர்களும் நாணயத்தாளின் பெறுமதியினைத் தெரிந்துகொள்ள உதவும் விதத்தில் நாணயத் தாளின் இடது பக்கத்தில் காணப்படும் நாணயத் தாளின் பெறுமதிக்கேற்ப அதிகரித்துச் செல்லும் விதத்தில் நெருக்கமான முறையில் புள்ளிகள் நிலைக்குத்தாக அச்சடிக்கப்பட்டிருக்கின்றன (ரூ.20 நாணயத் தாளுக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையில்).

7. மேற்கிளம்பிய அச்சிடல் பரப்பு

தாளின் குறுக்குப் பக்கமாக உங்களின் விரல்களை ஓடவிடுவதன் மூலம் மேற்கிளம்பிய அச்சிடல் பகுதியொன்றினை உணரமுடியும். (உ-ம்: மத்திய வங்கியின் பெயர், தொட்டறியக்கூடிய நாடா வடிவிலான ஒரு பகுதி, மத்தியிலுள்ள பிம்பம் போன்றன).

**குறிப்பு: இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டு இலங்கையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் இலங்கைக்குள் எந்தவொரு தொகைக் கொடுப்பனவிற்கும் சட்ட ரீதியான நாணயமாக இருக்கும்**

நாணயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி: 011-2477587, email: currency@cbsl.lk www.cbsl.gov.lk

# வடமாகாண முன்பள்ளிகள் இவ்வாண்டு முதல் வடமாகாண கல்வியமைச்சுடன் இணைப்பு

வடமாகாண முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு வடமாகாண கல்வி அமைச்சினால் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலகு ஒன்றினை ஆரம்பிப்பதற்கும் அதற்குரிய முகாமைத்துவத் திட்டத்தினை 01.01.2011ஆம் திகதியில் இருந்து செயற்படுத்துவதற்கும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தீர்மானித்ததற்கு அமைய, இம் மாகாணத்தில் இயங்கும் சகல முன்பள்ளிகளும் 01.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் யாப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இம் முகாமைத்துவத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு வலைப்பின்னல் அமைப்பில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

★ வட மாகாண சபையில் ஆலோசனைக் குழு ஒன்று இயங்கும் . இக்குழு பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளரினால் தலைமை தாங்கப்படும். இக் குழுவே மாகாண முன்பள்ளிகள் சம்பந்தமான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

★ வலய மட்டத்தில் வலய ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்குழு இயங்கும். இக் குழுவிற்கான அங்கத்தவர்கள் வலயக்கல்விப் பணிப்பாளரால் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனங்கள் வழங்கப்பட்டு வலய மட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

★ அதேபோல் கோட்ட மட்டத்திலும் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு குழு செயற்படும். இது கோட்டக்கல்வி அதிகாரியின் தலைமையில் நடைபெறும் கோட்டக் கல்வி அதிகாரியினால் குழு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபாரிசின் பேரில் இவர்களுக்கான நியமனங்கள் கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும்.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களிலும் முன்பள்ளி முகாமைத்துவக்குழுக்கள் இயங்கும். இம் முகாமைத் துவக் குழுவில் முன்பள்ளி நடத்துநர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் செயற்படுவர்.

### முன்பள்ளிகளுக்கான பிரமாணங்கள்

முன்பள்ளிகள் பின்வரும் அடிப்படைப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ முன்பள்ளிகளுக்கான கட்டம் குறைத்து ஒரு பிள்ளைக்கு 10 சதுர அடியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

★ 25 பிள்ளைகளுக்கு ஒரு மலசலகூட வசதி என்ற அடிப்படையில் போதுமான அளவு வசதி இருத்தல் வேண்டும்.

★ போதியளவு காற்றோட்டம் வரக்கூடிய வகையில் 1:7 கியூபிக் என்ற அளவில் ஜன்னல்கள் அமைக்கப்பட வேண்டும்.

★ முன்பள்ளியைச் சுற்றி பாதுகாப்பான வேலிகள் அமைக்கப்படல் வேண்டும்.

★ முன்பள்ளியில் பொருத்தமான முதலுதவிப்பெட்டிகள் இருத்தல் வேண்டும்.

★ முன்பள்ளிகளின் அமைவிடம், கவர்ச்சியான சூழல் , ஏற்ற பூங்கா, விளையாட்டு முற்றம் என்பனவற்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு 5 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

★ பிள்ளைகளுடைய உளத் திருப்திக்கு ஏற்ற வகையில் பாதுகாப்பான தளபாடங்களும் உபகரணங்களும் மெருகூட்டப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

★ சமய அனுட்டானங்களை மேற்கொள்வதற்கான இட ஒதுக்கீடுகள் அமைந்திருத்தல் வேண்டும்.

★ எந்த ஒரு முன்பள்ளியும் இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய சூழலில் அமைத்தல் கூடாது. அத்தகைய இடத்தில் இருந்து குறைந்தது ஆயிரம் மீற்றருக்கு அப்பால் இருத்தல் வேண்டும்.

### முன்பள்ளி ஆசிரியர்களின் தகைமைகள்

01.01.2011ஆம் திகதியில் முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இத்திட்டத்தினுள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுவோர் ஒரு வருட காலத்திற்குள் மொழி,கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

அத்துடன் மூன்று வருட காலத்திற்குள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் முன்பள்ளி கல்வி டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறியில் பங்குபற்றி சித்தியடைதல் வேண்டும்.குறிக்கப்பட்ட காலத்தினுள் கல்வித்தகைமையையும் தொழில்தகைமையையும் அடையத்தவறும் ஆசிரியர்கள் பதவியில் இருந்து விலக்கப்படுவர்.

### முன்பள்ளிகளை பதிவுசெய்தல்

★ 01.01.2011 ஆம் திகதிக்குப் பின்னர் மாகாண ஆலோசனைக்குழுவின் அனுமதி இன்றி தனிநபரோ, குழுக்களோ, நிறுவனங்களோ, அமைப்புக்களோ வடமாகாணத்தில் முன்பள்ளிகளை ஆரம்பித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

★ இத்திட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 3 மாதம் முடிவடைவதற்குள் முன்பள்ளிகளை பதிவதற்கு ஆலோசனைக்குழுவின் விதப்புரைக்கு ஏற்ப விண்ணப்பித்தல் வேண்டும்.

★ அவ்வாறு குறிக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பிக்கத் தவறுவோரிடமிருந்து ஆலோசனைச் சபை மேலதிக தொகை ஒன்றினை அறவிடும்.

★ 3 வயதிற்கும் 5வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கான ஆரம்பப் பிள்ளைப் பருவ கல்வி முயற்சியில் ஈடுபடும் நிறுவனம் முன்பள்ளி நிறுவனமாக இத் திட்டத்தின் கீழ் கருதப்பட்டு உள்வாங்கப்படும்.

★ முன்பள்ளியை நடத்தும் எந்தவொரு நபரும் இத்திட்டத்தில் கூறப்பட்ட விதப்புரைக்கு முரணாக செயற்பட்டால் குற்றத்திற்கு ஆகக்கூடிய தொகையாக 500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்படும்.

★ முன்பள்ளிகளின் பதிவுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் அதற்குரிய காரணங்களை விண்ணப்பம் கிடைத்து ஒருமாத காலத்திற்குள் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். இது விடயமாக பிரதம செயலாளருக்கு விண்ணப்பித்தோர் மனுச் செய்யலாம்.அம் மனுக்களை பிரதம செயலாளர் ஆலோசனைக்குழுவின் தீர்மானத்திற்கு அனுப்பி வைப்பார்.

★ ஆலோசனைக்குழு முன்பள்ளிகளை பதிவு செய்து அதற்குரிய சான்றிதழையும் வழங்கும்.அச்சான்றிதழ் ஒரு சட்ட ஆவணமாகக் கருதப்படும்.

★ முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொருத்தமான அறிமுக அட்டை ஆலோசனைக்குழுவினால் பதிவு செய்து வழங்கப்படும்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விளக்கங்களை அந்தந்தப் பகுதி கோட்டக்கல்வி அதிகாரி முன்பள்ளி இணைப்பாளர்,முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர்,மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 30 மி.மீ. உயரமும் 123 மி.மீ. அகலமும் கொண்ட முத்திரை

இலங்கையின் மிகப் பெரிய முத்திரை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

நிலக்கரி மூலம் இயங்கும் வைஸ்ரொய் புகையிரதம் சுற்றுலாத்துறையில் ஈடுபடுத்தப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு அதன் ஞாபகார்த்தமாக இம் முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

இம் முத்திரை 30 மில்லிமீற்றர் உயரமும் 123 மில்லிமீற்றர் அகலமும் கொண்டதுடன் 45 ரூபா பெறுமதியுடையது என்று தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றைய வலம்புரியில் இம் முத்திரை 30 சென்ரிமீற்றர் உயரமும் 132 சென்ரிமீற்றர் அகலமும் கொண்டது என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### அழைப்பின் பேரில் சாரதி சேவை (Driver on call)

அழைப்பின் பேரில் சாரதி சேவையை வழங்கக்கூடிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட அனைத்து வாகனங்களையும் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்துள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 15.02.2011ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனம் செலுத்துவதில் சிறந்த தேர்ச்சி, அனுபவம், உடற்தகுதி மற்றும் வாகனம் செலுத்தும் போது ஏற்படக்கூடிய சிறு பிழைகளைக் கண்டறிந்து திருத்தும் ஆற்றல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் இருந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அவ்விண்ணப்பப்படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்கவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அனுபவம் மற்றும் வேறு ஏதாவது பொருத்தமான விபரங்களுக்கான சான்றிதழ்கள் யாவற்றினதும் போட்டோப் பிரதிகளை தவறாது இணைத்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக் கிளை,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல் வேலி எனும் முகவரிக்கு அனுப்பவும்.

பதிவாளர்
03.02.2011

(சி/2339)



## எமது சேவையை விஸ்தரிப்பதை முன்னிட்டு 15-02-2011 முதல்

10 புகைப்படங்களுக்கு மேல் பிரதியாக்கம் செய்யும் புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு

4R - 8.50
10x15 - 55.00
10x30 - 100.00

Fuji Paper & Chemical

CD DVD Cover - 30/= (XEROX)

ஏனைய வாடிக்கையாளர்களுக்கு 4R - 10/=

குறைந்த கட்டணத்தில் உடனுக்குடன் அடையாள அட்டைப்படங்களை பிடித்திடவும் பனர்,ஸ்ரிக்கர் மற்றும் கலர் பேப்பர்களில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளவும் உங்கள் இல்லங்களில் நடை பெறுகின்ற மங்களகரமான வைபவங்களை வீடியோ,புகைப்படங்களாகப்பிடித்திடவும் அவற்றை அழகுற அல்பங்களாக கட்டிப் பெற்றிடவும் யாழ் நகரின் இன்றைய முன்னணி நிறுவனம்.



மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 021 222 1358

# ...ந்திய வங்கி
# ...வெளியீடு சிறப்பு மலர்-04.02.2011

## ...ளுநரின் செய்தி

51இல் சுதந்திர இலங்கையின் முதலாவது நாணயத்தாளை
யமுகாமைத்துவ தொழிற்பாடுகளை கடந்த 60 ஆண்டுகளாக
ற்கொண்டு வருகின்றது. மத்தியவங்கி அதன் வைரவிழாவினை
வுகளின் ஒரு அங்கமாக இவ்வாண்டில் நாணயத் தாள்களின்
வதுடன், வங்கி அதன் முக்கியபொறுப்புக்களிலொன்றாக விளங்கும்
மற்றும் முகாமைத்துவத்தின் வினைத்திறனையும் கனதியான
டுத்துவதற்கான புதிய முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது.
ரிய தீர்ப்பனவுகளுக்கான கணனிமுறைமை, மற்றும் நேர
க்கல் வாங்கல் போன்ற வேறுகொடுப்பனவு மாதிரிகளின்
ாணயங்கள் இன்னமும் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு
கருவியாக இருந்து வருகிறது. உண்மையில், பொதுமக்கள்
வருகின்றது. இச் சூழ்நிலையை, நாட்டில் ஏற்பட்ட சமாதான
க்கு மாகாணங்கள் நாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கை
ந்து. கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பாக கிராமிய, பெருந்தோட்ட
வடிக்கைகளிலும் பெருமளவிற்கு காசின் அடிப்படையிலேயே
ளியீடும் அதன் முகாமைத்துவமும் இலங்கை மத்திய வங்கியின்
ம். மக்களுக்கு சிறந்த பணியினை வழங்குவதே எப்பொழுதும்
பத் தாள்களைக் கொண்டபுதிய தொடர்களின் அறிமுகம் மத்திய

டி.தீரசிங்க, துணை ஆளுநர், இலங்கை மத்திய வங்கி.

சொற்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டன.
லுபடியற்றதாக்கும் நடவடிக்கை
தல் சட்டம் இயற்றப்பட்டதுடன் 1970இல் செல்லுபடியற்ற
டோபர் 26... திகதிக்கு முன்னைய திகதியைத் தாங்கிய
நவம்பர் ...ஆம் திகதியிலிருந்து சட்ட ரீதியான அந்தஸ்து
கையினால் பாதிக்கப்பட்ட நாணயத் தாள்களுக்குப் பதிலாக
பத் தாள்கள் அச்சிடப்பட்டன. இத் தாள்களில் மகா பராக்கிர
எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் கை மேலே
றங்களுடன் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த வெளியீடானது
க் கருதப்படாது எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின்

ாடர்கள்
ப அரசியல் யாப்பின் கீழ், நாடு இலங்கைக் குடியரசு என
த்தின் அலுவல்சார் சின்னமாக மாற்றமடைந்த இலங்கை
.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா உருவப்படம் 1975இல்
00 இன் நாணயத் தாள்களில் மட்டும் காணப்பட்டது.
ளக் கொண்ட தொடர்
தாடரில் இலங்கை மத்திய வங்கி நாணயத்தின் வடிவமைப
இவ் வடிவமைப்புக்கள் இங்கிலாந்தில் பிராட்பறி வில்கின்சன்
லங்கையின் முன்னாள் கலைஞரால் வரையப்பட்டதுடன்
புக்களும், இலங்கையின் செடிகள், மலர்கள், பறவைகள்,
ாரும் இயற்கையான சூழலுடன் பொறிக்கப்பட்ட உருவங்
நாணயத் தாள்கள் அதிகளவில் பாவிக்கப்பட்டு அழுக்
ாறுவதனைக் குறைப்பதற்காக, இத் தொடரில் ரூ.20 இன
டது.

பின்பக்கம்



பொருளியல் தொடர்கள்
நாணயத் தொடர் வழங்கல்களில் ரூ.1,000 இன தாள் தவிர்ந்த
மற்றும் தொல் பொருளியல் பண்புகளைக் கொண்டிருந்தன.
ிட்டத்தின் போவத்தன்ன நீர்த்தேக்கத்தின் விம்பத்தினையும்
பத்தினையும் கொண்டிருக்கிறது இத் தொடரில் இலங்கை
ல் பயன்படுத்தப்படும் ரூ.50 மற்றும் ரூ.100 இன நாணயத்
ாக இரண்டு உயர் பெறுமதி கொண்ட நாணயத் தாள்களான

த்தித் தொடர்கள்
மம்பட்ட பாதுகாப்புப் பண்புகளுடன் மீளவடிவமைக்கப்பட்ட
டும் உள்ளடக்கியிருந்தன. இதன் மத்திய பகுதி கண்டி புனித
பி, விக்டோரியா அணை, றுகுணு பல்கலைக் கழகம் என்பன
தற்றடவையாக இத் தாள்கள் ஆங்கிலத்தில் "Central Bank
al Bank of Sri Lanka" என்ற சொற்களைத் தாங்கியிருந்தன.
ாடர்கள்
போதய தொடர்கள் சுற்றோட்டத்தில் நீண்டவையாகக் காணப்
க்காட்டும் விதத்தில் மீள வடிவமைக்கப்பட்டிருந்தன (அனைத்து
தோற்றம் பண்டைய கற்சிற்பம், பாரம்பரிய முக மூடிகள்,
பெரஹரவிற்காக ஆடைகளால் அலங்கரிக்கப்பட்ட யானை,
பழைய பாராளுமன்றம் (தற்போதைய ஜனாதிபதி செயலகம்)
மீன்பிடித்தல் மற்றும் தேயிலை கொழுந்து பறிப்போர் ஆகிய
யர்ந்த மேம்பட்ட பாதுகாப்புப் பண்புகளையும் கொண்டிருநதன.
ர் இன நாணயத் தாள்கள் மேம்பட்ட பாதுகாப்பு பண்புகளை
வங்கி உயர் பெறுமதியான ரூ.2,000 இன நாணயத் தாளினை
மம்பட்ட பண்புகளுடன் உலகின் பாரம்பரிய அமைவிடங்களில்
ந்ததுடன் அதன் பின்பக்கத்தில் சுவரோவியம் காணப்படுகிறது.
றும் இலங்கை நடனக் கலைஞர்கள்
சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள்" என்ற தொனிப்
டர்களை மிக விரைவில் வெளியிட உத்தேசித்திருக்கிறது.
வெளியிடப்படுவதுடன் 6 நாணய இனங்களையும் உள்ளடக்
வுள்ள ரூ.5,000 இன நாணயத்தாள் மத்திய வங்கி நிறுவப்
பெறுமதியைக் கொண்ட நாணயமாக இருக்கும். ரூ.2,000
ாட்டாது. அத்துடன், ரூ.10 நாணயக் குத்தி ஏற்கனவே சுற்றோட்
த்திய வங்கி இப் புதிய தொடர்களில் 10 நாணயத் தாளை
ங்கியினால் வெளியிடப்பட்டு சுற்றோட்டத்திலுள்ள அனைத்து
அந்தஸ்தினைக் கொண்டிருப்பதுடன் எந்தவொரு தொகைக

டப்பட்ட நாணயக் குற்றிகள்
வெளியிட்ட சுற்றோட்ட நாணயக் குற்றிகளான -/25 சதம்,
தொடர்ந்தும் பிரித்தானிய ஆட்சியாளரின் உருவ பொறிப்
ளயே 1963 வரை கொண்டிருந்ததுடன் 1951இல் மேற்
ளப்பட்ட மீளவார்ப்பிலும் கூட இந் நிலைமையே காணப்
. இக் காலப்பகுதியில் பௌத்தத்தின் 2500 ஆவது ஆண்டு
வினையும் தேசத்தின் பிறப்பினையும் (புத்த ஜெயந்தி குற்றி)
ின்ற ரூ. 1 மற்றும் ரூ. 5 இன நியம சுற்றோட்ட வகையிலான
ார்த்த நாணயக் குற்றிகள் I இராச்சியத்தின் றோயல் மின்டில்
கப்பட்டு 1957இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளி
ட்டன. 1963இல் நாணயக் குற்றிகள் வார்க்கப்பட்டமையானது
கையின் சுதந்திர அந்தஸ்தினைப் பிரதிபலித்ததுடன்
க் குற்றியின் முன்பக்கத்தில் தேசியக் கொடியிலுள்ள

சிங்கத்தினையும் முடியையும் காட்டுகின்ற இலங்கையின் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருந்தது. ரூ.1, -/50 சதம், -/25 சதம், -/10 சதம், -/5சதம், -/02 சதம் மற்றும் -/01 சத நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டன.

நாணயக் குற்றியின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்டிருந்த இலங்கை அரச இலட்சினைக்குப் பதிலாக சிறிலங்கா அரச இலட்சினை (இதில் முடிக்குப் பதிலாக தர்மசக்கரம் இடம்பெற்றது) பொறிக்கப்பட்ட ஆண்டான 1972இல் நாணயக் குற்றிகளின் வடிவமைப்பில் அடுத்த முக்கிய மாற்றம் இடம்பெற்றது. 1963ஆம் ஆண்டு நாணயக் குற்றிகளின் பின்பக்கத்தில் நாட்டினை அடையாளம் காண்பதற்காக, பயன்படுத்தப்பட்ட 'லங்கா' என்னும் சொல்லிற்குப் பதிலாக 1972இல் "சிறிலங்கா" என்னும் சொல் பயன்



முன்பக்கம் பின்பக்கம்

படுத்தப்பட்டது. ரூ.2 மற்றும் ரூ.5 நாணயத் தாள்களுக்குப் பதிலாக 1984இல் ரூ. 2 நாணயக் குற்றிகளும் (செப்பு, நிக்கல்), ரூ. 5 நாணயக் குற்றிகளும் (நிக்கல், பித்தளை) பொதுச் சுற்றோட்டத்திற்காக வார்க்கப்பட்டன. 2005இல் இலங்கை மத்திய வங்கி பிரமாணம், நிறை, உலோகம் மற்றும் குற்றியின் நிறம் எனபனவற்றின் மாற்றங்களுடன் புதிய நாணயக் குற்றிகளை அறிமுகப்படுத்தியது. ரூ.5, ரூ.2, ரூ.1, -/50 சதம், -/25 சதம் ஆகிய இன நாணயக் குற்றிகள் முலாமிடப்பட்ட உருக்கின் மீதான வெவ்வேறுபட்ட உலோகக் கலப்பால் ஆனவையாக இருந்தன. முதற்றடவையாக பதினொரு கோணங்களைக் கொண்ட நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கிலான ரூ.10 இன நாணயக் குற்றிகள் (2009 ஆண்டுடன்) பொதுச் சுற்றோட்டத்திற்காக 2010 ஏப்ரலில் வெளியிட்டன. இந் நாணயக் குற்றி, சுற்றோட்டத்திலுள்ள மற்றைய நாணயத் தாள்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைந்த பாவனைக் காலத்தினைக் கொண்ட ரூ.10 நாணயத் தாள்களுக்குப் பதிலாக வெளியிடப்பட்டதாகும்.

### இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஞாபகார்த்த நாணயத் தாள்களும் குற்றிகளும்

சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்ற நிகழ்வுகளையும் மாண்புமிக்க ஆளுமை கொண்டவர்களையும் குறிக்கும் விதமாக ஞாபகார்த்த நாணயக் குற்றிகளும் தாள்களும் வெளியிடப்படுகின்றன. இவை, குறிப்பிட்டதொரு காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களைப் போலன்றி குறிப்பிட்ட வடிவமைப்பினையும் எழுத்து வரிகளையும் கொண்டிருக்கும். குறிப்பாக, நாணய சேகரிப்பாளர்களுக்கும் நாணயவியலாளர்களுக்கும் கிடைப்பதில் காணப்படும் இதன் அருந்தலான தன்மை இதன் உண்மையான பெறுமதியை அதிகரிக்கிறது. ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் வேறுபட்ட அளவுகளில் தங்கம், வெள்ளி அதே போன்று கலப்பு உலோகங்கள் போன்ற உயர் பெறுமதி கொண்ட உலோகங்களில் வார்க்கப்படுகின்றன.

இந நாணயக் குற்றிகளில் சில கறைபடியாத வகை நாணயக் குற்றிகளாக சிறப்பாக நாணயச் சேகரிப்புக்களுக்காக வார்க்கப்படுகின்றன. இவை சுற்றோட்டத்திற்கானவையாக வடிவமைக்கப்படவில்லை. ஞாபகார்த்தக் குற்றிகள் நியம சுற்றோட்ட வகை நாணயக் குற்றிகளாகவும் வார்க்கப்படுகின்றன. இவை ஞாபகார்த்தத்திற்குரிய நிகழ்வுகள் அல்லது கௌரவிக்கப்படும் ஆட்களை பற்றி பொதுமக்களிடையே அறிவூட்டுவதனை நோக்காகக் கொண்டிருக்கின்றன.



முன்பக்கம் பின்பக்கம்

பதிவேடுகளின்படி, இலங்கையில் முதலாவது ஞாபகார்த்த நாணயக் குற்றி 1957இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கி 50 ஞாபகார்த்த நாணயக் குற்றிகளையும் 02 ஞாபகார்த்த நாணயத் தாள்களையும், பல்வேறுபட்ட நிகழ்வுகளையும் பெருமக்களையும் நினைவூட்டும் விதத்தில் வெளியிட்டிருக்கிறது. மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவினை குறிக்கும் விதத்தில் ரூ.5,000 இன முதலாவது பல்வர்ண (கறைபடியாத வெள்ளிக்குற்றி) நாணயக் குற்றியொன்றினை மத்திய வங்கி 2010 டிசம்பர் 15ஆம் நாளன்று வெளியிட்டது.

இலங்கை மத்திய வங்கி 1998இல் இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினத்தினை குறிக்கும் விதத்தில் ரூ.200 இன பொலிமர் தாளினை சுற்றோட்டத்திற்காக வெளியிட்டது. "சமாதானத்திற்கான விடியல் மற்றும் இலங்கைக்கான சுபீட்சம்" என்பதன் ஞாபகார்த்தமாக 2009இல் மத்திய வங்கி ரூ.1,000 இன ஞாபகார்த்த நாணயத் தாளொன்றினை வெளியிட்டது. இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே வெளியிட்ட ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் மற்றும் தாள்களின் விபரங்கள் அட்டவணை IIஇல் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

### இலங்கை மத்திய வங்கிக்காக நாணயத் தாள்களை அச்சிடல் மற்றும் நாணயக் குற்றிகளை வார்த்தல்

இலங்கை மத்திய வங்கி நிறுவப்படுவதற்கு முன்னர், நாணய ஆணையாளர் சபைக்கான நாணயத் தாள்களை இங்கிலாந்தின் டி லா றூ அன் கம்பனி அச்சிட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் இவை இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு அச்சகத்தில் அச்சிடப்பட்டன. போர்க் காலத்தில் இலங்கை அரச அச்சகமும் அவசரகால துணை நாணயத் தாள்களை அச்சிட்டது. இலங்கை மத்திய வங்கிக்கான முதலாவது நாணயத் தாள் தொடர்களை ஐக்கிய இராச்சியத்தின் பிராட்பறி வில்கின்சன் அன்ட் கம்பனி அச்சிட்டிருந்ததுடன், இக் கம்பனி இலங்கை மத்திய வங்கிக்கான நாணயத் தாள்களை கணிசமான காலப்பகுதிக்கு அச்சிடுவதற்காக, மற்றைய நாணய வழங்குநர்களிடையே இருந்து போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 1983இல் பாதுகாப்பு அச்சிடலுக்கான கூட்டு முயற்சியொன்று ஐக்கிய இராச்சியத்தின் பிராட்பறி வில்கின்சன் (பிஎல்சி) இற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே உருவாக்கப்பட்டது. இது பிராட்பறி, வில்கின்சன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் ஆக கூட்டிணைக்கப்பட்டது. பிராட்பறி வில்கின்சன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் பியகமவிலுள்ள ஏற்றுமதி பதனிடல் வலையத்தில் தொழிற்படத் தொடங்கியது. 1988 இலிருந்து இலங்கை மத்திய வங்கியின் நாணயத் தாள்களை அச்சிட்டு வழங்கியதுடன் வரலாற்று மற்றும் அபிவிருத்தி நாணயத் தாள் தொடர்களின் வெளியீடு ஆரம்பமாயிற்று. அவுஸ்திரேலியாவின் 'நோட் பிறின்ரிங்' இனால் அச்சிடப்பட்ட ரூ.200 பொலிமர் ஞாபகார்த்த நாணயத் தாள் மட்டுமே இதற்கு விதிவிலக்காக இருந்தது.

அதேவேளையில், இங்கிலாந்தின் தோமஸ் டி லா றூ 1986இல் இங்கிலாந்தில் பிராட்பறி வில்கின்சன் அன்ட் கம்பனியினை கையேற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 1990இல் பிராட்பறி வில்கின்சன் (லங்கா) பிறைவேட் லிமிடெட்டிற்கு தோமஸ் டி லா றூ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என மீளப் பெயரிடப்பட்டது. தற்பொழுது நாணயத் தாள்களை அச்சிடுவதில் ஏறத்தாழ 150 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட ஐக்கிய இராச்சியத்திலுள்ள தாய்க் கம்பனியான டி லா றூவின் கீழ், டி லா றூ லங்கா கரண்டி அன்ட் செக்குறிட்டி பிறின்ட் பிறைவேட் லிமிட்டெட் தொழிற்படுகின்றது.

சுற்றோட்டத்திற்கு விடும் நாணயக் குற்றிகளின் தேவைகளை இலங்கை மத்திய வங்கி 1957 வரை நாணய ஆணையாளர் சபை மேற்கொண்டதைப் போன்று பம்பாயிலும் கல்கத்தாவிலுள்ள இந்திய அரசாங்கத்தின் வார்ப்புத் தொழிற்சாலையிலிருந்து பெற்றுக் கொண்டது. அதன் பின்னர் மத்திய வங்கி, 1996இல் றோயல் கனடியன் மின்ட் இனால் வார்க்கப்பட்ட -/50 சத நாணயக் குற்றியின் வழங்கல் தவிர்ந்த அதன் நாணயக் குற்றி தேவைப்பாடுகளை றோயல் மின்ட் இலிருந்து பெற்றுக் கொண்டிருந்தது. 2009 டிசம்பர் வரை ஐக்கிய இராச்சியத்தின் ஹெர் மஜெஸ்டி திறைசேரி திணைக்களமாக தொழிற்பட்ட, நாணயக் குற்றிகளை வார்ப்பதில் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினைக் கொண்ட றோயல் மின்ட் 2010 ஜனவரியிலிருந்து அதன் அந்தஸ்தினை த றோயல் மின்ட் லிமிட்டெட் என முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியாக மாற்றிக் கொண்டது.

அட்டவணை I

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத் தாள்கள்

| தொடர்கள் | தொனிப்பொருள் | இன வகை (ரூ.) | தாளின் ஆண்டு |
|---|---|---|---|
| 01 | ஏ I ஆவது ஜோர்ச் மன்னர் | 1 மற்றும் 10 | 1951 |
| 02 | II ஆவது எலிசபெத் மகாராணி | 1,2,5,10,50,100 | 1952 |
| 03 | இலங்கை அரச இலட்சினைத் தொடர் | 1,2,5,10,50,100 | 1956 |
| 04 | எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவப்படத் தொடர் | 2,5,10,50,100 | 1962 |
| 05 | பராக்கிரமபாகு மன்னரின் தொடர்கள் | 2, 5, 10, 50, 100 | 1965 |
| 06 | இலங்கை அரச இலட்சினைத் தொடர் | 50,100 | 1975 |
| 07 | செடிகள் மலர்களின் தொடர்கள் | 2, 5, 10, 20, 50, 100 | 1979 |
| 08 | வரலாற்று மற்றும் தொல்பொருளியல் தொடர்கள் | 5, 10, 20, 50, 100, 500, 1000 | 1981 |
| 09 | வரலாறு மற்றும் அபிவிருத்தித் தொடர்கள் | 500,1000 | 1987 |
| 10 | இலங்கை பாரம்பரியத் தொடர்கள் | 10, 20, 50, 100, 500, 1000, 2000 | 1991 2005 |
| 11 | அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் கலைஞர்கள் | 20, 50, 100, 500, 1000, 5000 | 2010 |

அட்டவணை II

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஞாபகார்த்த நாணயக் குற்றிகள் மற்றும் நாணயத் தாள்கள் (1957 – 2010)

| இல. | விபரணம் | நாணயக் குற்றியின் ஆண்டு | முகப்புப் பெறுமதி (ரூ) | உலோகம்/ மூலப் பொருள் |
|---|---|---|---|---|
| 1 | 2500 ஆவது பௌத்த மற்றும் தேசிய பிறப்பு ஆண்டு நிறைவு (2500 புத்த ஜெயந்தி) - (சுற்றோட்டம்) | 1957 | 5 | வெள்ளி |
| 2 | 2500 ஆவது பௌத்த மற்றும் தேசிய பிறப்பு ஆண்டு நிறைவு (2500 புத்த ஜெயந்தி) - (சுற்றோட்டம்) | 1957 | 1 | செப்பு/ நிக்கல் |
| 3 | உணவு வேளாண்மை அமைப்பின் சிறப்பு நாணய வழங்கல் (சுற்றோட்டம்) | 1968 | 2 | செப்பு/ நிக்கல் |
| 4 | 5ஆவது அணிசேரா மாநாடு - (சுற்றோட்டம்) | 1976 | 5 | நிக்கல் |
| 5 | 5ஆவது அணிசேரா மாநாடு - (சுற்றோட்டம்) | 1976 | 2 | செப்பு/ நிக்கல் |
| 6 | 1ஆவது நிறைவேற்று ஜனாதிபதி (ஜே.ஆர்.ஜெயவர்த்தன) - (சுற்றோட்டம்) | 1978 | 1 | செப்பு/ நிக்கல் |
| 7 | 1ஆவது நிறைவேற்று ஜனாதிபதி (ஜே.ஆர்.ஜெயவர்த்தன) - (கறைபடியாதது) | 1978 | 1 | தங்கம் 22 கரட் |
| 8 | சர்வஜன வாக்களிப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 1981 | 5 | செப்பு/ நிக்கல் |
| 9 | மகாவலி அபிவிருத்தி திட்டம் - (சுற்றோட்டம்) | 1981 | 2 | செப்பு/ நிக்கல் |
| 10 | புகலிடமற்றோருக்கான புகலிடத்திற்கான சர்வதேச ஆண்டு - (சுற்றோட்டம்) | 1987 | 10 | செப்பு/ நிக்கல் |
| 11 | புகலிடமற்றோருக்கான புகலிடத்திற்கான சர்வதேச ஆண்டு - (கறைபடியாதது) | 1987 | 10 | செப்பு/ நிக்கல் |
| 12 | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1990 | 500 | வெள்ளி |
| 13 | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1990 | 1000 | வெள்ளி |
| 14 | 5ஆவது தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு விழா - கொழும்பு - (கறைபடியாதது) | 1991 | 500 | தங்கம் 22 கரட் |
| 15 | 5ஆவது தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு விழா - கொழும்பு - (கறைபடியாதது) | 1991 | 100 | வெள்ளி |
| 16 | நிறைவேற்று ஜனாதிபதி பதவியேற்ற 3ஆவது ஆண்டு (ஆர்.பிரேமதாச) - (கறைபடியாதது) | 1992 | 1 | செப்பு/ நிக்கல் |
| 17 | [illegible] | 1992 | 1 | வெள்ளி |
| 18 | [illegible] | 1992 | 1 | வெள்ளி |
| 19 | [illegible] | 1992 | 1 | தங்கம் 22 கரட் |
| 20 | 2300 அனுராத மிகிந்து ஜெயந்தி - (கறைபடியாதது) | 1993 | 500 | வெள்ளி |
| 21 | உணவு வேளாண்மை அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 1995 | 2 | செப்பு/ நிக்கல் |
| 22 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50 ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 1995 | 5 | நிக்கல்/ பித்தளை |
| 23 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50 ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1995 | 5 | நிக்கல்/ பித்தளை |
| 24 | ஐக்கிய நாடுகள் சிறுவர் அவசர கால நிதியத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 1996 | 1 | செப்பு/ நிக்கல் |
| 25 | மீண்டும் சுதந்திரமடைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1998 | 5000 | தங்கம் 22 கரட் |
| 26 | மீண்டும் சுதந்திரமடைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1998 | 1000 | வெள்ளி |
| 27 | மீண்டும் சுதந்திரமடைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு | 1998 | 10 | நிக்கல்/ பித்தளை மற்றும் செப்பு/ நிக்கல் |
| 28 | [illegible] | 1998 | 200 | பொலிமர் |
| 29 | உலக கிரிக்கட் கிண்ணம் வெற்றி 1996 - (கறைபடியாதது) | 1999 | 1000 | வெள்ளி |
| 30 | உலக கிரிக்கட் கிண்ணம் வெற்றி 1996 - (சுற்றோட்டம்) | 1999 | 5 | நிக்கல்/ பித்தளை |
| 31 | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 1999 | 1 | நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு |
| 32 | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சிறப்புச் சுற்றோட்டம்) | 1999 | 1 | நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு |
| 33 | இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 2000 | 1000 | வெள்ளி |
| 34 | இலங்கை கடற்படையின் 50 ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 2000 | 1 | நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு |
| 35 | இலங்கை கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சிறப்புச் சுற்றோட்டம்) | 2000 | 1 | நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு |
| 36 | இலங்கை விமானப்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 2001 | 1 | செப்பு/ நிக்கல் |
| 37 | கொழும்பு திட்டத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு | 2001 | 2 | நிக்கல்/ பித்தளை |
| 38 | சியாமோபசம்பதுபவரின் 250ஆவது ஆண்டு நிறைவு (வெலிவிட்ட சிறி சரணங்கரவின் உருவம்) - (சுற்றோட்டம்) | 2003 | 2 | நிக்கல்/ பித்தளை |
| 39 | சியாமோபசம்பதுபவரின் 250ஆவது ஆண்டு நிறைவு (வெலிவிட்ட பிற உபாலி நகிமி உருவம்) - (சுற்றோட்டம்) | 2003 | 5 | நிக்கல்/ பித்தளை |
| 40 | புத்தர் பெருமான் மறைந்த 2550ஆவது ஆண்டு நிறைவு (2550ஆவது புத்த ஜெயந்தி) - (கறைபடியாதது) | 2006 | 1500 | வெள்ளி |
| 41 | புத்தர் பெருமான் மறைந்த 2550ஆவது ஆண்டு நிறைவு (2550ஆவது புத்த ஜெயந்தி) - (கறைபடியாதது) | 2006 | 2000 | வெள்ளி/ குறிப்பிட்ட இடங்களில் தங்க முலாம் |
| 42 | புத்தர் பெருமான் மறைந்த 2550ஆவது ஆண்டு நிறைவு (2550ஆவது புத்த ஜெயந்தி) - (சுற்றோட்டம்) | 2006 | 5 | பித்தளை/ முலாமிடப்பட்ட உருக்கு |
| 43 | கிரிக்கெட் உலகக் கிண்ணம் (இரண்டாமிடம்) - (சிறப்புச் சுற்றோட்டம்) | 2007 | 1000 | நிக்கல்/ முலாமிடப்பட்ட உருக்கு |
| 44 | கிரிக்கெட் உலகக் கிண்ணம் (இரண்டாமிடம்) - (சுற்றோட்டம்) | 2007 | 5 | பித்தளை/ முலாமிடப்பட்ட உருக்கு |
| 45 | ஊழியர் சேம நிதியம் 50ஆவது ஆண்டு நிறைவு - (சிறப்புச் சுற்றோட்டம்) | 2008 | 1000 | நிக்கல் / முலாமிடப்பட்ட உருக்கு |
| 46 | ஊழியர் சேம நிதியம் 50ஆவது ஆண்டு நிறைவு - (கறைபடியாதது) | 2008 | 1000 | நிக்கல் / முலாமிடப்பட்ட உருக்கு |
| 47 | ஊழியர் சேம நிதியம் 50ஆவது ஆண்டு நிறைவு - (சுற்றோட்டம்) | 2008 | 2 | நிக்கல் / முலாமிடப்பட்ட உருக்கு |
| 48 | இலங்கைச் சுங்கத்தின் இரு நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம் - (கறைபடியாதது) | 2009 | 200 | வெள்ளி |
| 49 | இலங்கை இராணுவத்தின் 60ஆவது ஆண்டு - (சிறப்புச் சுற்றோட்டம்) | 2009 | 1000 | வெள்ளி |
| 50 | இலங்கை இராணுவத்தின் 60ஆவது ஆண்டு - (சிறப்புச் சுற்றோட்டம்) | 2009 | 1000 | செப்பு/ நிக்கல் |
| 51 | இலங்கைக்கான சமாதானத்தின் விடியல் மற்றும் சுபீட்சம் (வங்கித்தாள்) - (கறைபடியாதது) | 2009 | 1000 | பஞ்சு |
| 52 | இலங்கை மத்திய வங்கியின் 60ஆவது ஆண்டு நிறைவு | 2010 | 5000 | வெள்ளி |

# திறமைக்கு ஏற்ற உயரம்...

இந்தச் சமூத்தில் நீங்கள் எப்படி வளர்ந்தீர்கள்? பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் உங்களுக்கு நல்லது செய்வதாக நினைத்து என்னசெய்தார்கள்?

சுற்றியுள்ளவர்கள் யாருடனாவது ஒப்பிட்டு உங்களை எப்போதுமே குறைத்து மதிப்பிட்டே வந்திருக்கிறார்கள். ஏன்? இன்னொருத்தரைவிடத் தாழ்வாக உணர்ந்தால்தான் உங்களுக்குள் ஓர் உந்து சக்தி பிறக்கும். என்றும், அது வெற்றியைநோக்கி உங்களை விரட்டிச் செலுத்தும் என்றும் அவர்கள் கருதினார்கள்.

உங்களைச் சிறப்பாகப் பரிமளிக்கச்செய்ய, வேறுவழிமுறைகளை அவர்



கள் அறிந்திருக்கவில்லை. ஒருகட்டத்தில் அப்படி ஒப்பிடுவதை அவர்கள் நிறுத்திவிடுகிறார்கள். ஆனால், மற்றவருடன் ஒப்பிட்டுக்கொண்டு உங்களை விரட்டிச்செல்லும் பழக்கத்தை உங்களால் தவிர்க்க முடியாமல் சிக்கிக்கொண்டீர்கள்.

ஒரு தடவை சங்கரன்பிள்ளை, தன் மனைவியிடம் பெரிதாகச் சண்டை போட்டார். முடிவில் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். மூன்று நாட்களுக்கு இங்கும் அங்குமாக அலைந்தார். நான்காவது நாள் காலையில் ஒரு உணவு விடுதிக்குள் நுழைந்தார். சப்பிளையரை அழைத்தார்.

"கல்லுப்போன்ற சூடில்லாத இட்லி, வாயில்வைக்கமுடியாத சாம்பார், தண்ணீர்ப் பாலில் பழைய டிகாக்ஷன் போட்டு ஆறிப்போன காபி" என்று ஆர்டர் கொடுத்தார். சப்பிளையர் திகைத்தார். "என்ன கேவலமான ஆர்டர் இது?"

"நண்பரே, நான் பசியால் இங்கு வரவில்லை. எனக்கு வீட்டு ஞாபகம் வந்துவிட்டது" என்றார் சங்கரன் பிள்ளை.

இப்படித்தான் பழைய பழக்கத்தைச் சுலபத்தில் விடமுடியாமல் நீங்களும் அவதிப்படுகின்றீர்கள். மற்றவரை உயர்வாக நினைத்து அவரையே இலக்காகத் தீர்மானித்துக் கொள்கிறீர்கள். உங்களுக்குள் சவால் விட்டுக் கொள்கிறீர்கள். இல்லாத சிறகுகளைக் கட்டிக்கொண்டு படபடக்கிறீர்கள்.

அவரைவிட உயர்ந்த இடத்தை அடைய போராடிப்போராடி சென்றடைவீர்கள். அதற்குள் வேறொருத்தர் இன்னும் முன்னே போய்நின்று, அங்கிருந்து பழிப்புக் காட்டுவர். உங்களை அங்கே விரட்டிச் செல்ல அடுத்த சாட்டையைக் கையில் எடுத்துக்கொள்வீர்கள் இது எப்படியிருக்கிறது தெரியுமா?

ஒரு எலாஸ்டிக் பட்டையை இருபுறமும் இழுத்துப்பிடித்தால், அந்த டென்சன் தாங்காமல் இருமுனைகளும் ஒன்றையொன்று எட்டிவிட வேண்டும் என்று துடிக்கும். கையை எடுத்ததும் முனைகள் உந்தப்பட்டு ஒன்றுடன் ஒன்று மோதும். அப்புறம்?

இருமுனைகளும் செயலற்றுக் கிடக்கும். மறுபடி இழுத்துப்பிடித்தால்தான் அதில் துடிப்பான இயக்கத்தைக் காண முடியும். இப்படி வெளிச்சக்தியால் உந்தப்பட்டு இலக்கில் போய் விழுந்தால், அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் விழிப்பீர்கள். அடுத்த இலக்கைக் காட்டி உங்களை உசிப்பினால்தான் மீண்டும் இயங்குவீர்கள்.

இழுக்கப்பட்ட எலாஸ்டிக் எத்தனை நாளைக்குத் தாக்குப்பிடிக்கும்? ஒரு கட்டத்தில் தலை தொய்ந்து அதன் தன்மையையே இழக்கும். பிறகு, லேசாக இழுத்ததுமே பொட்டென்று அறுந்தே போகும். உறுதியில்லாத சிலர் இப்படித்தான் டென்ஷன் தாங்காமல், தங்கள் இலக்கை எட்டுவதற்குப் பதிலாக, இதயத்தைப்பிடித்துக்கொண்டு மருத்துவமனையில் போய் விழுகிறார்கள்.

வாழ்க்கை பூராகவும் உங்களை ஏன் வேறு யாரோ செலுத்த வேண்டும்? அடுத்தவரிடம் அதிகாரத்தை நீங்கள் ஏன் ஒப்படைக்க வேண்டும்? உங்களுக்கு மலையேற வேண்டும் என்று ஆசையிருந்தால், மலை யேறும் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். போதிய சக்தியைக் கால்களுக்கு கொண்டுவர வேண்டும். அதைவிடுத்து, இன்னொருத்தரைக்காட்டி சும்மா மனதை விரட்டிக் கொண்டிருந்தால் போதுமா? அதுவே உங்களை மலை உச்சியில் கொண்டு போய் விட்டுவிடுமா?

உங்களால் எப்போது சிறப்பாகச் செயலாற்றமுடியும்? மற்றவருடன் ஒப்பிட்டுப்பார்த்து ஓடிக்கொண்டே இருக்கும்போதா? விழிப்புணர்வுடன் அமர்ந்து திட்டமிடும்போதா? அமைதியாக, விழிப்புணர்வுடன் செயல் படுவது என்பது உங்கள் ஆசைக்கு குறுக்கே எழுப்பப்படும் வேகத்தடை அல்ல. உங்கள் வளர்ச்சிக்கு எதிராக விதிக்கப்படும் தடை உத்தரவும் அல்ல. அது உங்களை விடுவித்து விரும்பியதிசையில் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும் சக்தி.

ஆனந்தமாக இருப்பதுதான் உங்கள் அடிப்படை இயல்பு என்பதை மறவாதிருங்கள். யாராலும் விரட்டப்படாமல் அமைதியாக இருங்கள். தேர்ந்தெடுத்த செயலில் விழிப்புணர்வுடன் தீவிரமாயிருங்கள். முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள்.

அப்போதுதான், வளர்ச்சியை நோக்கி அழைத்துச்செல்லும் உள்சக்தியை உங்களுக்குள்ளேயே அடையாளம் காண்பீர்கள். அந்த உள்சக்கதிமட்டுமே உங்களைச் செலுத்தும் சக்தியாக இருக்கட்டும்.

இன்னொருவர் சென்று சேர்ந்த அதே உச்சியை நீங்கள் அடைய முடியாமல் போகலாம். ஆனால், உங்கள் திறமைக்கு ஏற்ற உயரத்தை அடைந்திருப்பீர்கள். அது உங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி தரும்.



ஆன்மீகம் 08

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறுவர் இலக்கியம் 02

## சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு நோக்கு

சிறுவர்களுக்கு விருப்பமான விலங்குகள் அவரது பாடல்களில் இடம்பிடித்துள்ளன.

உ+ம்:

பூனைக்குட்டி

'புவனா வளர்த்த பூனைக்குட்டி
துள்ளி ஆடுதே - அதைப்
பார்த்திருந்த எலிகளெல்லாம்
துள்ளி ஒடுதே
சின்னச் சின்னக் காலை வைத்து
மெல்லப் போகுதே - சோறு
தின்ன வந்த எலியை எல்லாம்
கொல்லப் போகுதே

வட்ட வட்டக் கண்ணை அது
வெட்டிப் பார்க்குதே - சட்டி
பெட்டிக்குள் இருந்த எலிகள்
எட்டிப் பார்க்குதே'

இத்துறையில் ஆக்கங்களை எழுதியோருள் ஆரையம்பதியைச் சேர்ந்த ஆரையூர் அமரனும் (அமரசிங்கம்) குறிப்பிடத்தக்கவராவார். கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் நாடகம் எனப் பலதுறைகளிலும் தடம் பதித்தவர் இவர். இலங்கையின் 'ஈழகேசரி' முதலான பத்திரிகைகளிலும் தமிழ்நாட்டின் 'பாலபாரதி', 'அம்புலி மாமா' ஆகிய சஞ்சிகைகளிலும் சிறுவர்களுக்கான இவரது பாடல்கள் வெளிவந்துள்ளன.

உ+ம்:

அழுத குழந்தை

'குழந்தை ஒன்று அழுததாம் -
அதைக்
குட்டி நாயும் பார்த்ததாம்
கிட்ட ஓடி வந்ததாம் - ஒரு
குட்டிக் கரணம் போட்டதாம்'

(பாலபாரதி: டிசம்பர்:1954)

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சிறுவர் இலக்கிய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஆட்டுக்குட்டியாரே

'துள்ளித்துள்ளிப் பாயாதே
வெள்ளை ஆட்டுக்குட்டியாரே
பள்ளம் மேடு இருக்குமே
பாய்ந்தால் கால்கள் உடையுமே
எந்தன் உள்ளம் துள்ளுதே
உந்தன் அழகு காணவே
எந்தன் அருகில் வந்தாலே
இலையும் புல்லும் தருவேனே'

(அம்புலிமாமா: 1951)

மட்டக்களப்பு பிரதேசத்தில் சிறுவர் பாடல்களில் அதிக அக்கறையுடன் ஈடுபட்ட இன்னும் ஒருவர் திமிலைத் துமிலன் (சி.கிருஷ்ணபிள்ளை) ஆவார். கவிதைத்துறையில் அதிக ஈடுபாடுடைய இவர் சிறுவர் பாடல்களையும் அதிகம் எழுதியுள்ளார். 'அழகுமுல்லை' (1986) என்பது இத்தகைய தொகுப்புகளில் ஒன்று. அதில் உள்ள பின்வரும் பாடல், பாடசாலைக்குச் செல்லும் சிறுமி ஒருத்தியின் குரலாக அமைந்துள்ளது.

'பட்டுச்சட்டை போட்டுவிடு
பையைத் தோளில் மாட்டிவிடு
பொட்டும் அழகாய் வைத்துவிடு
போகும் முன்போர் முத்தமிடு'

பெரியார்களைச் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தும் விதமாகப் பின்வரும் பாடல் அமைகின்றது. இது ஆறுமுகநாவலர் பற்றிய அறிமுகம் ஆகும்.

'சைவம் தழைக்கவில்லை தமிழ்உரை
தத்தித் தழைக்கவில்லை
தெய்வம் நினைத்ததடா-ஆறுமுகத்
தென்றல் உதித்ததடா'

இத்தொகுப்பில் இருபத்தொன்பது பாடல்களும், ஏழுகதைப்பாடல்களும் உள்ளன. 'வழிதவறிய வண்டு' என்னும் இவரது கவிதை, 1959இல் சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத்தால் நடாத்தப்பெற்ற போட்டியில் சிறுவர்க்கேற்ற சிறந்த கவிதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் இத்துறையில் எழுதியோருள் வெற்றிவேல் விநாயகமூர்த்தி என்பவரும் ஒருவராவார். பாலர் பாமாலை (1964), பொதுப்பாமாலை (1993) ஆகிய இருதொகுதிகள் வெளிவந்துள்ளன. பாலர் பாமாலையில் இருபத்தாறு கவிதைகளும், பதினொரு கதைப்பாடல்களும் உள்ளன. கவிதைகளில் பிராணிகள், இயற்கைப் பொருட்கள், பெரியார்கள், விளையாட்டு, தொழில் முதலான பலவிடயங்கள் கருப்பொருள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

'குரங்கு' என்னும் தலைப்பிலான பாடலில் ஒருபகுதி வருமாறு:

'காட்டில் வாழும் குரங்கு பார்
கவனம்மிகுந்த மிருகம்பார்
வீட்டில் கட்டிவளர்ப்பர் பார்
விளையாட்டுக்கள் பழகும் பார்'

'எண்' பற்றிய பாடலில் ஒருபகுதி வருமாறு:

'நாலும் ஒன்றும் ஐந்து
நாம் அடிப்போம் பந்து
ஐந்தும் ஒன்றும் ஆறு
அம்மா தருவாள் சோறு'

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

இவரது கதைப்பாடல்கள் சிறுவர்களால் விரும்பப் படுவனவும், நன்கறியப்பட்டனவுமான கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.

(தொடரும்)

# அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன் வரவேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்க முன்வர வேண்டும் என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விளம்பரக் கட்டணம் அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகரசபை பல அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றது இதன்படி இவ்வாண்டில் பாஷையூர் மீன் சந்தைக்கு அருகாமையில் உள்ள சிறுவர் பூங்கா மற்றும் யூபிலி சிறுவர் பூங்கா, அரசடி சிறுவர் பூங்கா, நல்லூர் சங்கிலி சிறுவர் பூங்கா ஆகிய பூங்காக்கள் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கு பல நிறுவனங்கள் உதவிகள் வழங்க முன்வந்துள்ளன.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் மேற்கொண்டு எனது பதவிக்காலம் முடிவதற்குள் நான் முன்பு கூறியது போன்று குட்டிச் சிங்கப்பூராக மாற்றுவேன் என அவர் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மேலும் இவ்வருட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் யாழ். பொது நூலகத்திற்கு புதிதாக வர்ணம்பூசவும் திட்டமிட்டுள்ளோம். இதற்கு 1.7 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அத்துடன் நூலகக் கூரையும் புனரமைக்கப்படவுள்ளது.

அத்தோடு யாழ். மாநகர சபையினால் இதுவரை காலமும் விளம்பரக் கட்டணங்கள் குறைவாகவே அறவிடப்பட்டு வந்தமையால் அதனை அதிகரிப்பது தொடர்பாகவும் தீர்மானித்துள்ளோம்.

இதன்படி விளம்பரக் கட்டணங்களுக்கு ஆயிரம் ரூபா அதிகரிப்பதாக அறவிக்கப்பட்டது. ஆனால் அது கொழும்பு, கண்டி போன்ற மாநகர சபையை விட அதிகமாகவுள்ளதாக வர்த்தகர்களினால் எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த அவசரக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் விளம்பரக் கட்டணங்கள் சதுர அடிக்கு 200 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நகர மத்தியில் விளம்பர பலகைகளின் ஆகக் கூடியளவு 20'X 10' எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி மாநகர சபை எல்லைக்குள் ஏற்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை யாழ். மாநகர உறுப்பினர்கள் கண்காணிக்க வேண்டும். இவ்வாறு பல சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமை மாநகரசபையின் நடவடிக்கைக்கு எதிரானதாகவும் அமையும் என தெரிவித்தார்.

வர்த்தக நிலையங்கள், உணவு விடுதிகள் என்பவற்றில் காலாவதியான பொருட்கள் விற்கப்பட்டு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை குருநகர் பகுதியில் உள்ள உணவு விடுதியினை திடீர் சோதனைக் குட்படுத்திய வேளையில் அங்கு பழுதடைந்த உணவுப் பொருட்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அக்கடை சீல் வைக்கப்பட்டது.

எனவே, இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைளை கட்டுப்படுத்த உதவ வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

# கைவிடப்பட்ட வாகனங்களை இதுவரை மீளப் பெற்றுக்கொள்ளாதோரின் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வன்னி இறுதிப் போரின் போது வாகனங்கள்/ மோட்டார் சைக்கிள்களைக் கைவிட்டு இதுவரை காலமும் மீளப்பெற்றுக்கொள்ளாதவர்கள் தங்களின் வாகனம்/மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான விபரத்தினை உரிமையாளரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கிராம சேவையாளரின் பிரிவும் பதிவு இலக்கமும், பதிவு இலக்கமும், இயந்திர இலக்கம், அடிச்சட்ட இலக்கம், வகை , வகுப்பு, நிறம், விசேட அடையாளங்கள் ஆகியவை அடங்கிய மாதிரி விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து பூர்த்தி செய்து எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக கைவிடப்பட்ட வாகனங்களை மீள வழங்கும் நிலையம், மாவட்ட செயலகம் , கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களினை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே வாகனங்களை மீள வழங்கும் நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என அவர் அறிவித்துள்ளார்.

எனவே, வாகனங்களின் விபரத்தினை வெகுவிரைவில் அனுப்பிவைக்குமாறு வாகனங்களை கைவிட்டு இதுவரை மீளப் பெற்றுக்கொள்ளாத அனைத்து உரிமையாளர்களையும் அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வித்தகபுரம் ஜே/223 பிரிவில் மீள் குடியேறிய மக்களின் காணிகளில் நடைபெறும் கொள்ளைகளைத் தடுக்கும் முகமாக தெல்லிப்பழை பொலிஸ் அதிகாரியால் கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

எனவே , இப்பகுதி வாழ் மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# தேசிய தொழில் தராதரமுறைமை சான்றிதழுக்கான இறுதிப்பரீட்சை

(கொழும்பு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் கணனிப் பிரயோகம், கணனி வன்பொருள், அலுமினியப் பொருத்துகை. வெல்டிங், மோட்டார் சைக்கிள் திருத்துகை, வீட்டு மின்னிணைப்பு, மரவேலை, கட்டட நிர்மாணம் ஆகிய கற்கை நெறிகளை பயின்று NVQ சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தோற்றுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார்.

கணனி பிரயோகம், மோட்டார் சைக்கிள் திருத்துகை இறுதி மதிப்பீடு மாவட்டப் பணிமனை, இல 375, கே.கே.எஸ். வீதியிலும் கணனி வன்பொருள் , மரவேலை இறுதி மதிப்பீடு தொழிற் பயிற்சி நிலையம் , ஏ-9 வீதி , கைதடியிலும் வெல்டிங் இறுதி மதிப்பீடு தொழிற்பயிற்சி நிலையம், அரசாங்க அதிபர் பணிமனை அருகில், ஊர்காவற்றுறையிலும் அலுமினியப் பொருத்துகை, கட்டட நிர்மாணம் இறுதி மதிப்பீடு காரைநகர் தொழிற்பயிற்சி நிலையம், வலந்தலைச் சந்தியிலும் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏற்கனவே NVQ பரீட்சையில் தோற்றி NVQ சான்றிதழ் பெறாத மாணவர்களும் ஏற்கனவே வழங்கப்பட்ட அலகு ரீதியான பரீட்சைப் பதிவு சான்றிதழுடன் மேற்படி பரீட்சையில் சித்தியடையாத அலகினை மட்டும் மதிப்பிடுவதற்காக வருகை தருமாறும் மேலதிக விபரங்களுக்கு 021222 7949 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ)




★ 1783 - ஐக்கிய அமெரிக்கா மீது தனது அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்துவதாக ஐக்கிய இராச்சியம் அறிவித்தது.

★ 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாக ஜோர்ஜ் வோஷிங்டன் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1794 - பிரெஞ்சுக் குடியரசு முழுவதும் அடிமைத் தொழில் சட்டவிரோதமாக்கப்பட்டது.

★ 1810 - கரிபியன் தீவுகளான குவாட்லூப் (Guadeloupe) பிரித்தானியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

★ 1834 - இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை சிலோன் ஒப்சேர்வர் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

★ 1859 - கிரேக்க பைபிளின் 4ம் நூற்றாண்டுக் கையெழுத்துப்படி ஒன்று எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1899 - பிலிப்பைன்ஸ்-அமெரிக்கப் போர் ஆரம்பமானது.

★ 1932 - இரண்டாம் உலகப் போர்: சீனாவின் ஹார்பின் நகரை ஜப்பான் பிடித்தது.

★ 1936 - முதற்தடவையாக ரேடியம் E என்ற செயற்கைக் கதிரியக்க மூலகம் உருவாக்கப்பட்டது.

★ 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் முடிவுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானிய பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்யத் ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உக்ரேனில் யால்ட்டா மாநாட்டில் சந்தித்தனர்.

★ 1957 - திருகோணமலையில் கறுப்புக்கொடியைக் கட்ட முயன்ற திருமலை நடராசன் பொலிஸாரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

★ 1966 - ஜப்பான் போயிங் விமானம் டோக்கியோவில் வீழ்ந்ததில் 133 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1969 - பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக யாசர் அரபாத் பதவியேற்றார்.

★ 1976 - குவாத்தமாலா மற்றும் ஹொண்டுராஸ் நிலநடுக்கத்தில் 22ஆயிரம் பேர் இறந்தனர்.

★ 1978 - இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக ஜே.ஆர் ஜெயவர்த்தனா பதவியேற்றார்.

★ 1997 - இஸ்ரேலில் இரண்டு உலங்குவானூர்திகள் வானில் மோதியதில் 73 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1998 - ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற 6.1 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 2003 - யூகொஸ்லாவியா அதிகாரபூர்வமாக சேர்பியா மற்றும் மொண்டெனேகுரோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 2007 - ஒலியை மிஞ்சிய வேகத்தில் செல்லும் ரஷ்ய-இந்திய பிரமாஸ் ஏவுகணை ஒரிசா ஏவு தளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

★ 2007 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற உலகின் மிகப் பெரிய கூட்டுப் பிரார்த்தனையில் 3 மில்லியனுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

### பிறப்புகள்

★ 1913 - றோசா பாக்ஸ், ஓர் ஆபிரிக்க அமெரிக்க குடியுரிமைகள் செயற்பாட்டாளர் (இ.2005)


★ 1921 - கே.ஆர்.நாராயணன், இந்தியாவின் ஜனாதிபதி (இ.2005)

### இறப்புகள்

★ 1747 - வீரமாமுனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (பி.1680)

★ 1928 - ஹெண்ட்ரிக் லோரெண்ட்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி.1853)

★ 1974 - சத்தியேந்திரா போஸ், இந்திய இயற்பியலாளர் (பி.1894)



**1948 - இலங்கையின் சுதந்திர தினம்**

## வாய்ப்பாட்டு மனனப் போட்டி

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 5இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான வாய்ப்பாட்டு மனனப் போட்டிகள் நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துஆரம்பப் பாடசாலையில் நடைபெற வுள்ளது.

அன்றைய தினம் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி கையேடுகள் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை விநியோகிக்கப்படும்என்றும்ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை தவறாது பெற்றுக்கொள்ளும்படியும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் போராளிகள் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கி வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்படும் முன்னாள் போராளிகளுக்கு சகலவிதமான பயிற்சிகளையும் வழங்க முடியும் என்ற போதிலும் அவர்களுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் நடைமுறைச் சிக்கல் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு வாழ்க்கைத் திறன் மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக 2 இலட்சம் முதல் 25 இலட்சம் ரூபா வரையில் கடனுதவி வழங்கப் பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

4 ஆயிரத்து 600 முன்னாள் விடுதலைப் புலி போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக மாதாந்தம் 73 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு வருவதாகவும் ஒன்பது முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் அநேகமான முன்னாள் போராளிகள் தங்களது குடும்பத்தாருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தியத்தலாவையிலுள்ள கிராமமொன்று முற்றாக புதையுண்டு போகும் அபாயம்!

## அச்சத்தில் மக்கள்

(கொழும்பு)

மத்திய மலைநாட்டின் தியத்தலாவை பிரதேசத்தில் உள்ள கிராமமொன்று முற்றாக நிலத்தில் புதையுண்டு போகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் தியத்தலாவை கொஸ்கஹகும்புர எனும் கிராமமே நிலத்தில் முற்றாகப் புதையுண்டு போகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கிராமத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதுடன் பல இடங்களில் நிலத்தில் வெடிப்புகளும் தோன்றியிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக அங்கிருக்கும் ஐம்பது வீடுகள் கடும் சேதத்தை எதிர்கொண்டுள்ளன.

அவ்வீடுகளின் சுவர்கள் மற்றும் அத்திவாரம் என்பன வெடிப்புக்குள்ளாகியிருப்பதுடன் தற்போதைய நிலையில் அவற்றில் எட்டு வீடுகள் கடுமையான சேதத்துக்குளாகி யிருக்கின்றன.

பெரும் அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள அப் பிரதேச மக்கள் தற்போது அரசாங்கத்தினால் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை

(கொழும்பு)

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்ச ஊழல் மோசடி ஒழிப்பு ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள காரணத்தினால் பெருமளவு முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக குறிப்பிடப்படுகிறது.

இவ் ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த 2008ஆம் ஆண்டுடன் பூர்த்தியானதாகவும் அதன் பின்னர் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் பெருமளவிலான முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் தேங்கிக் கிடப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையில் ஆயிரத்து 354 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் ஆணைக்கழுக்கள் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய உத்தியோகத்தர்கள் ஆணைக் குழுவிற்கு நியமிக்கும் வரையில் முறைப்பாடுகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள் பலருக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல் மோசடிகளினால் நாட்டின் நல்லாட்சிக்கு குந்தகம் ஏற்படும் எனவும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தமிழ் மொழிபெயர்ப்பாளர்களுக்கான பற்றாக்குறையால் விருப்பு வாக்கு இலக்கங்களை வழங்குவதில் தாமதம்

## தேர்தல் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மாவட்ட செயலகங்களில் தமிழ் மொழிப் பெயர்ப்பாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக உள்ளூராட்சிச்சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கு இலக்கங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

மூன்று மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய அதிகாரிகள் குறைவாக இருப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மொனராகலை, பொலனறுவை, கம்பஹா, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்ட செயலகங்களில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் எவரும் பணியாற்றவில்லை.

அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, நுவரெலியா, குருநாகல் மாவட்ட செயலகங்களில் தலா ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் கடமையாற்றுகின்றனர். தற்போதுள்ள வளங்களை பயன்படுத்தி எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட் கிழமைக்கு முன்னர் விருப்பு வாக்கு இலக்கங்கள் வெளியிடப்படும் என தேர்தல் செயலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சகல வேட்புமனுக்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டும். இதற்கு குறுகிய கால அவகாசம் தேவை எனவும் கொழும்பில் உள்ள பிரதான அலுவலகத்தில் வேட்பு மனுக்கள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் அவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




யா/ஞானபண்டிதா வித்தியாலயத்திற்கு சுவிஸ் பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் தண்ணீர்த் தாங்கிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் எஸ்.இளங்கோவனும் பெற்றோரும் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைப்பதை படத்தில் காணலாம்.

(படம்:-என்.குமார்)

# ஐ.நா. மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வடக்கு அபிவிருத்தி

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வடக்கு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்படும் அபிவிருத்தி நிலைமைகளை வடக்கிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கூட்டு ஒத்துழைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசாங்கமும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து வடக்கை அபிவிருத்தி செய்யவுள்ளன.

வீடுகளை அமைத்தல், விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுதல், உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் முதலீடு செய்ய வேண்டுமென அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.
*-மெர்ரி கிளாட்சன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ராஜா... ராஜா... ரா...ஜா போங்க ராஜா போங்க...

பேராசிரியர் சாலமன் பாப்பையா நடத்தும் பட்டிமன்றத்திற்கு தனிச் சிறப்புண்டு. பட்டிமன்றத்தின் இடைஇடையே பேராசிரியர் பாப்பையா ஒரு அதட்டல் அதட்டுவார். அந்த அதட்டல்தான் பட்டிமன்றம் சிறப்பதற்கே காரணம் எனலாம்.

பாப்பையாவின் பட்டிமன்றத்தில் 'ராஜா' வின் பேச்சும் அற்புதமானது. ராஜாவை பேசுவதற்காக 'ராஜா வாங்க' அப்படின்னு பேராசிரியர் பாப்பையா அழைப்பாரே அந்த நேரம் அவை சிரித்து மகிழும்.

'வாங்க ராஜா' என்பது பாப்பையாவின் பட்டிமன்றத்திற்குரியது. நாங்களோ 'போங்க ராஜா' என்று தி.மு.க. ராஜாவை சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆம், முதல்வர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராஜாவை ஊழல் குற்றச்சாட்டின் பேரில் மத்திய புலனாய்வுப் பணியகம் கைது செய்துள்ளது.

ஆ.ராஜா தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்தபோது இடம்பெற்றதாக கூறப்படும் ஒரு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் கோடி ரூபாய் ஊழல் தொடர்பிலே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜாவின் கைது தமிழகத்தின் ஆட்சியை தனது குடும்பத்திற்கு கையளிக்கவிருந்த முதல்வர் கருணாநிதிக்கு பேரிடியாக அமைந்துவிட்டது.

வர்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்குதல், காப்புறுதி கொடுப்பனவுகள், கலைஞரின் வீட்டுத் திட்டம் இப்படியெல்லாம் வியூகம் அமைத்து தமிழகத்தின் ஆட்சி அதிகாரம் அ தி மு கவுக்கோ அன்றி இதர கட்சிகளுக்கோ பறிபோகாத வகையில் கலைஞர் தீட்டிய திட்டம் தவிடுபொடியாகிப் போகும் அளவிற்கு ராஜாவின் ஊழலும் அவரின் கைதும், விசாரணையும் அமைந்துள்ளன.

தன்னை தமிழ் பற்றாளராகக் காட்டிவந்த முதல்வர் கருணாநிதி, வன்னி யுத்தத்தின் போது மிகவும் தந்திரமாக நடந்துகொண்டார்.

வன்னி யுத்தத்தில் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் உயிரிழந்ததையும் பெரிது படுத்தாமல் தனது குடும்பம், பதவி என்பதை மட்டும் கருதிய அவர் கடிதம் எழுதுவது, டி.ஆர்.பாலு தலைமையில் குழுவை அனுப்புவது என்ற மாயையை ஏற்படுத்தி ஈழத்தமிழினத்தை மிகமோசமாக ஏமாற்றினார்.

கூடவே செம்மொழி மாநாட்டை தனது குடும்ப மாநாடாக நடத்தி உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவனாகத் தன்னை பிரகடனம் செய்தார். ஆட்சியில் இருந்துவிட்டால் எல்லாம் செய்யலாம். எவரையும் ஏமாற்றலாம் என்று நினைப்பது மகாதவறு.

ராஜா போங்க; நீங்கள் உள்ள போக, ஐயா வெளிய போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# வீடமைப்புக் கடன்தொகை 5 இலட்சம் ரூபாயாக அதிகரிப்பு

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அரச மற்றும் அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ள வீட மைப்பு கடன்தொகை 5 இலட்சம்ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனை யோருக்கு இரண்டு இலட்சம் ரூபா வரை வீடமைப்புக்கடன் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இக்கடன் உதவியைப் பெறுவதற்கு இரண்டு அரச உத்தியோகத்தர்கள் பிணையாளராக கையொப்பமிடப்பட வேண்டும் என்ற நடைமுறை தளர்த்தப்பட்டு தற்போது ஒரு அரச உத்தியோகத்தரின் பிணையுடன் மேற் படி கடனைசகலரும்பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே கடன் பெற விரும்புபவர்கள் வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதன் ஊடாக இக்கடனைப் பெற்றுக் கொள்ளலாம் என வீடமைப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9-30)

## வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக வழக்கு தாக்கல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அக்மீமன பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி அல்லது மக்கள் விடுதலை முன்னணி அல்லது வேறு எந்த கட்சியா யிருந்தாலும் அதனால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரை தேவையேற்படின் சேர்த்துக்கொள்ளும் உரிமை உண்டென இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## இந்திய முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் ராஜா கைதானார்



(கொழும்பு)


இந்தியாவின் முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஏ.ராஜா மற்றும் அவ்வமைச்சின் முன்னாள் செயலாளர் சித்தார்த்த பெஹுரா ஆகியோர் இந்திய மத்திய புலனாய்வுப் பணியக (சி.பி.ஐ) அதிகாரிகளால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

2ஜி ஸ்பெக்ரம் அலைவரிசைகளை தனக்கு விருப்பமான நிறுவனங்களுக்கு முறைகேடாக வழங்கி அரசுக்கு 1.76 இலட்சம் கோடி இந்திய ரூபா நஷ்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட விவகாரத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 47 வயதான முன்னாள் அமைச்சர் ராஜா இக்குற்றச்சாட்டு தொடர்பான சர்ச்சையால் கடந்த நவம்பர் மாதம் அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

அவரும் அவ்வமைச்சின் முன்னாள் செயலாளர் பெஹுராவும் நேற்று முன்தினம் காலை சி.பி.ஐ. தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை முறைப்படி கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராஜாவின் முன்னாள் பிரத்தியேக செயலாளர் ஆர்.கே. சண்டோலியாவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் தமிழக நாடாளுமன்ற தேர்தலுக்காக தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியைப் பலப்படுத்துவதற்காக இந்திய பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோரை தி. மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி சந்தித்து இரு தினங்களின் பின் இக்கைது இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விபூதியின் இன்னொரு பெயர்

ஒருமுறை வாரியார், தேனி மாவட்டம் சுருளிமலை வேலப்பர் கோயிலுக்குச் சென்றார். இது காட்டுக்குள் உள்ள கோயில். அங்கு ஓர் அருவி இருக்கிறது. அதில் நீராடிவிட்டு விபூதி பூசிக்கொண்டு வாரியார் கோயிலுக்குப் புறப்பட்டார். வழியில், அம்மலைவாழ் மக்கள் சிலர் வாரியாரைப் பார்த்தனர். தலையில் விறகுக் கட்டு சுமந்து வந்த அவர்கள் அதைக்கீழே போட்டுவிட்டு தடாலென வாரியாரின் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

"சுவாமி, எங்களுக்கு 'ஐஸ்வரியம்' கொடுங்க" என்றனர்.

வாரியார் ஆச்சரியப்பட்டுப் போனார். அவரை அறியாமல் இடுப்பில் கட்டியிருந்த திருநீற்றுப்பையை எடுத்து எல்லோருக்கும் திருநீறு வழங்கினார். இது பற்றி அங்கு நடந்த கூட்டத்தில் பேசும்போது, "விபூதிக்கு 'ஐஸ்வர்யம்' என்ற பெயரும் உண்டு. அது இங்குள்ள மலைவாசிகளுக்குத் தெரிந்திருக்கிறது. மலைவாழ் மக்கள் என்றால் படிக்காதவர்கள் என எடை போட்டு விடக் கூடாது. படித்தவர்களுக்குத் தெரியாத விடயம்கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கிறதே" என்றார்.

# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம் 05

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

வழிபாட்டு நடைமுறைகள் பல நமது முன்னோர்களால் செயற்படுத்தப் பட்டுள்ளன. அவை காலங்காலமாகப் பின்வந்த தலைமுறையினர்க்குக் கையளிக்கப்பட்டுள்ளன. அந்த வழிபாட்டு நடைமுறைகள் கோயில் வழிபாட்டு நடைமுறைகள் தோன்றுவதற்கு முன்னரேயே மக்கள் மனம் பண்படச் செயற்படுத்தப்பட்டன.பண்டைய இலக்கியப் பதிவுகள் பல இதற்குச் சான்றாகவுள்ளன. இயற்கையாகக் கிடைக்கும் நறுமலர்கள் தூவிக் கொண்டு இயற்கைச் சக்திகளின் பேராற்றலை வழிபட்டுள்ளனர்.மனம் துன்புறும் வேளையில் இச்செயற்பாடு அமைதியையும் புதியதொரு நம்பிக்கையையும் தந்துள்ளது.

இந்த வழிபாட்டு முறையைச் செய்யாமல் மனம் உழலும் மணிவாசகர் தன் அனுபவத்தைப் பாடலிலே பொறித்துள்ளார். அவருடைய அனுபவம் இன்று நம்மையும் சீர்மியம் செய்யவல்லது. தன் பிறப்பையும் செயற்பாட்டையும் தானே ஒருமுறை எண்ணிப் பார்க்கவேண்டும். தன்குறையைத் தானே உணர்ந்து கொண்டால் மனம் செம்மை பெற்றுவிடும்.எனவே மணிவாசகர் அனுபவத்தைக் கூர்ந்து அவதானிப்பது நன்மை பயக்கும்.

முதலில் அவர் இரு விடயங்களைத் தன் குறைகளாகக் குறிப்பிடுகின்றார். 'தவமே புரிந்திலன்' என்பது அவர் குறிப்பிடும் முதல் விடயம். இறைவனை அடைவதற்குத் தவம் செய்யும் நடைமுறை ஒன்று உண்டு.ஐம்புலன்களையும் அடக்கி உலக வாழ்க்கையை முற்றாகத் திறந்து இறை சிந்தனையுடன் மட்டும் ஓரிடத்தில் இருப்பது தவமாகும்.தவத்தை வள்ளுவர் விளக்கும்போது வருமாறு கூறுவர்.

'உற்றநோய் நோன்றல் உயிர்க்கு
உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு'

உணவைச் சுருக்குதல் முதலிய வற்றால் வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிற உயிர்களுக்கு எவ்விதத் துன்பமும் செய்யாதிருத்தலும் தவத்திற்கு உருவாகும் என வள்ளுவர் வரையறை செய்துள்ளார். ஆனால் இவ்விரு செயற்பாடுகளும் எல்லோராலும் செய்யமுடியாதவை. எனவே மனதை வழிபாட்டில் செலுத்தப் பிறிதொரு செயற்பாடு நடைமுறையானது குளிர்ந்த மலர்களைத் தூவி இறைவனை வழிபடல் என்னும் நடைமுறை தோன்றியது. இதனைத்தொடர்ந்து செய்தால் இறைவன்நினைப்பை நாம் மனதில் நிறைத்துக் கொள்ளலாம்.

இந்த இரண்டு செயற்பாடுகளையும் செய்யாமல் உலகில் வாழ்வதால் எமது பிறப்பே பொருளற்றதாகிவிடும். வழிபாடு செய்தால் இறையடியார் என்னும் பெருமையைப் பெறலாம். எம்முடைய வினைகளை அகற்றுவதற்கு மலரிட்டு வழிபடல் உதவும். மணிவாசகர் மந்திரியாக இருந்தமையால் இத்தகைய வழிபாட்டினைச் செய்ய முடியவில்லை.எனவே அதனைச் செய்வதற்கு இனியொரு பிறவியை அருள வேண்டும் என இறைவனை வேண்டுகிறார். மனம் பக்குவப்பட்டு இறை சிந்தனையைப் பெறுவதற்கு மனிதப் பிறவியில் என்ன செய்யவேண்டும் என மணிவாசகர் விளக்குகிறார். அப்பர் இறைவன் அழகுக்கோலம் காண மனிதப் பிறவியை இறைவனிடம் கேட்டார். ஆனால் மணிவாசகரோ வழிபாடு செய்ய மீண்டும் மனிதப் பிறவியை இறைவனிடம் கேட்கிறார்.

"தவமே புரிந்தி லன் தண்மலர் இட்டு
முட்டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை யேன்
உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற்றி வேன்நின்
திருவடிக்காம்
பவமே யருளு கண்டாய் அடி
யேற்கெம் பரம்பரனே"



6எஸ் பாடசாலைகளுக்கான திட்ட அமுலாக்கத்தின் கீழ், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்கு நேற்று இசுறுபாய கல்வியமைச்சிலிருந்து குழுவினர் விஜயம் மேற்கொண்டனர். இக்குழுவினர் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஜெயனி திலகரட்ணம் உரையாற்றுவதையும் கைசன் உற்பத்தித்திறன் ஆலோசகர் லாய் பொன்சேகா வகுப்பறையை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# பொருட்களின் விலையைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்

## அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தி குறைந்த விலையில் மக்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந் தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான குழுவின் அமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து விவசாயிகளைப் பலப்படுத்தி அவர்களுக்கு நிவாரணம் வழங்கி இதற்குத் தீர்வு காணும் வேலைத் திட்டங்களை உடனடியாக முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

ச.தொ.ச மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கூடாக மக்களுக்குக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இவ்வமர்வின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது சந்தையில் நிலவும் அதிகரித்த மரக்கறி விலையைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது. குறிப்பாக, மரக்கறி போக்குவரத்து நடவடிக்கைகளின் போது இடம்பெறும் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான உபாயமாக பாதுகாப்பான கொள்கலன்களை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரமானியங்களை மேலும் முறையாகப் பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாகவும் இது தொடர்பில் விவசாயிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாகவும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

அதேவேளை மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி மக்களுக்குக் குறைந்த விலையில் மரக்கறி மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுமாறு அவர் உரிய அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

அண்மைக்காலமாக நிலவி வரும் தேங்காய் விலையேற்றம் தொடர்பிலும் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் கவனம் செலுத்தப்பட்டது. தேங்காய் விலையேற்றத்தைத் தடுக்கும் வகையில் தெங்கு அபிவிருத்தி அமைச்சினூடாக மக்களுக்குக் குறைந்த விலையில் தேங்காயைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு ஜனாதிபதி வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் கடற்றொழில் கூட்டுத்தாபனம் மீனவர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் மீனின் தொகையை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் சுதந்திர தினத்துக்கு அமெரிக்கா வாழ்த்து

(கொழும்பு)

இலங்கை இன்றைய தினம் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற நிலையில், அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனநாயகமான ஆட்சி தொடர்பில், அமெரிக்காவும் இலங்கையும் புரிந்துணர்வுடன் கூடிய உறவினை, பொறுப்பு பகிர்வினையும் கொண்டிருப்பதாக அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் யுத்த நிறைவைத் தொடர்ந்து இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதன் ஊடாக, இந்த உறவினை தொடர்ந்தும் பேணமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த உதவிகள் சமாதானம், சுபீட்சம் நீதி மற்றும் ஜனநாயகம் என்பன இலங்கையின் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜப்பான் உதவி

(கொழும்பு)

ஐந்து ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனங்களின் அமைப்பான ஜப்பான் பிளாட்போம் இணைந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 47.2 மில்லியன் ஜப்பானிய யென் (62 மில்லியன் இலங்கை ரூபா) பெறுமதியான நிவாரண உதவிகளை அண்மையில் வழங்கியுள்ளது.

உணவு, உணவல்லாத வேறு பொருட்கள், கிணறுகளை சுத்தம் செய்தல், பாடசாலைகளைத் திருத்துதல் என்பன இந்த உதவிகளில் அடங்கும். நிவாரண உதவிகளுக்கு மேலாக ஜப்பான் அரசு 2,607 மில்லியன் ரூபா பெறுமதியான 203 கூடாரங்களையும் ஆயிரத்து 500 படுக்கைகளையும் அவசர உதவிகளுக்காக வழங்கியுள்ளது. (ஸ்ரீ-2)



பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திலிருந்து யாழ்ப்பாணம் வருகை வந்த பிராந்திய ஆலோசகர் டேவிட் அஸ்லே, அபிவிருத்திக்கும் அரசியலுக்குமான செயலர் டொமினிக் வில்லியம் ஆகியோர் கடந்த முதலாம் திகதி யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கு விஜயம் செய்து யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்தனர். இந்நிகழ் வில் இவர்கள் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் மற்றும் டாக்டர் நாகநாதன் ஆகியோருடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# நேர்ப் நிறுவனத்தால் கிளிநொச்சியில் 5 ஆயிரம் வீடுகள் நிர்மாணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நேர்ப் நிறுவனம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கென இவ் வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வருடத்தில் வீட்டுத் திட்டம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இம்மாவட்டத்தில் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே கூடுதல் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-3-10)

# படகு கவிழ்ந்ததில் இரு மீனவர்கள் பலி

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிரதேசத்தில் நேற்று காலை மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்ததில் இரண்டு மீனவர்கள் பலியாகியுள்ளனர்.

திருக்கோயில் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களான சின்னத்தம்பி தணிகாசலம் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரே உயிரிழந்துள்ளவர்களாவர்.

தற்போது ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோயில் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தணிகாசலம் என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாகவும் பாலகிருஷ்ணனின் சடலத்தைத் தேடும் பணி தொடர்வதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த இருவரும் தலா நான்கு பிள்ளை களின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


## புனர் பாலஸ்தாபனம் நடக்கப் பிரார்த்திக்கின்றோம்



இன்று (04.02.2011) காலை 6.45 மணிக்கு புனர்நிர்மாணப் பணிக்காக மங்களகரமாகத் தொடங்கும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் புண்ணிய சேஷ்திரத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இனிதே நடைபெறவும் புனராவர்த்தன கும்பாபிஷேகம் என்ற பெரும் சாந்தி விழா சிறப்புறவும் எல்லாம் வல்ல இறை அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வழமைபோல் சிறப்புத் தின தரிசன காலங்களில் நடைபெறும் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அமுதூட்டும் பணி இக்காலங்களில் நடைபெறும் என்பதைத் தெரிவிப்பதோடு, நாடு நலம் பெறவும், மேற்சொல்லிய பணிகள் இனிதே பூர்த்தியாகவும், நமசிவாயப் பதிகம் எனும் சிவபுராணத்தை ஒவ்வொருநாளும் அந்தி, சந்தி நேரமாகிய மாலை ஆறு (6) மணியளவில் ஓதிப் பிரார்த்திக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

க.கு.க.சிவபாலன் (K.K.K)
அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்
தேசபந்து
(C-2338)



## மாதகல் புனித லூர்து அன்னை திருவிழா

04.02.2011 இன்று
அன்னையின் நவநாள் மாலை
4.30 மணிக்கு திருச்செப
மாலையுடன் ஆரம்பமாகி
12.02.2011 (சனிக்கிழமை)
அன்று மாலை 6 மணிக்கு
அன்னையின் தேர்பவனியும்
நற்கருணை ஆராதனையும்
இடம்பெற்று 13.02.2011 (ஞாயிறு)
காலை 7 மணிக்கு
அன்னையின் திருநாள்
திருப்பலி இடம்பெறும்.



பங்குத்தந்தையும்
பங்கு மக்களும்
(3631)

# உபுல் தரங்க அடித்தார் சதம்
# இலங்கை அணிக்கு வெற்றி



(கொழும்பு)

உபுல் தரங்கவின் பொறுப்பான சதத்தின் மூலம் இலங்கை அணி டக்வேத் லூயிஸ் முறையில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிவருகிறது.

இதில் முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணிக்கு ஹயில், பாரத் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் பாரத் 12 ஓட்டங்களுடன் குலசேகராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்த ஓவரின் முதலாவது பந்தில் கிறிஸ் ஹயில் 28 ஓட்டங்களுடன் முரளிதரன் பந்துவீச்சில் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 10.1 ஓவர்களில் 45 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த டரன் பிரவோ, சர்வான் ஜோடி நிதானமான ஆட்டத்தை வழங்கினர்.

எனினும் இந்தஜோடி 16 ஓவர்களில் 49 ஓட்டங்களை இணைப்பாட்ட மாக எடுத்தபோது ராம் நரேஷ் சர்வான் 21 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டரன் பிரவோவுடன் இணைந்த சகோதரன் டயானி பிரவோ பொறுப்பான ஆட்டத்தை வழங்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 100 ஓட்டங்களைத் தாண்டியது.

இதில் டரன் பிரவோ 64 பந்துகளில் (3 சிக்ஸர்கள் உட்பட 39 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பொல்லார்ட் 4 ஓட்டங்களுடன் மலிங்க வின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட்டாகி ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்துவந்த பாயு சிறப்பாக ஆட மறுமுனையில் டயானி பிரவோ 55 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களுடன் ஹேரத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசை வீரர்கள் சோபிக்காத நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 203 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் பாயு ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் மலிங்க 3 விக்கெட்டுக்களையும் குலசேகர, முரளிதரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹேரத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 204 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு திலகரட்ண டில்சான் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த தரங்க–சங்கக்கார ஜோடி சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இதில் இலங்கை அணி 14.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டையிழந்து 46 ஓட்டங்களை எடுத்தபோது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

எனினும் மழைகாரணமாக 20 நிமிடங்கள்தடைப்பட்ட ஆட்டம்மீண்டும் ஆரம்பமானபோது டக்வேத் லூயிஸ் முறையில் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 47 ஓவர்களில் 197 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க சிறப்பான அரைச் சதத்தைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 17 ஓவர்களில் 70 ஓட்டங்களைச் சேர்த்த போது அணித் தலைவர் குமார் சங்கக்கார 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தனா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அசத்தினார்.

மறுமுனையில் உபுல் தரங்க 138 பந்துகளில் தனது ஒருநாள் சதத்தைப் பூர்த்தி செய்து ஜொலிக்க இலங்கை அணி 42.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 199 ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் இலங்கை அணி டக்வேத் லூயிஸ் முறையில் 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் உபுல் தரங்க 143 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 101 ஓட்டங்களை எடுத்து 9ஆவது சதத்தையும், மஹேல ஜெயவர்த்தனா 46 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

பந்துவீச்சில் ராம்பூபால், டயானி பிரவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் இலங்கை வெற்றிக்கு சதமடித்து திருப்பு முனையமைத்த உபுல் தரங்க ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின்மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இத் தொடரின் தீர்க்கமானதும் இறுதியுமான போட்டி 6ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறுகின்றது.

# ஒருநாள் தொடர் பாகிஸ்தான் வசம்
# சொந்த மண்ணில் நியூசிலாந்து சோகம்

அகமெட் ஷீஷாட்டின் அதிரடி சதம் கைகொடுக்க பாகிஸ்தான் அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி ஒருநாள் தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 6 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள்தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதல் நான்கு போட்டிகளின் முடிவில் பாகிஸ்தான் அணி தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது. இந் நிலையில் ஐந்தாவது ஒரு நாள் போட்டி நேற்று ஹமில்டனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஷீஷாட்டின் சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கன்னிச்சதத்தைப் பூர்த்தி செய்த ஷீஷாட் 109 பந்துகளில் (12 பவண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 115 ஓட்டங்களையும் உமர் அக்மல் 32 மற்றும் மிஷ்பா உல் ஹக் 25, அணித்தலைவர் அப்ரிடி 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ், ஓரம், ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நாதன் மக்குலம் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 269 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.5 ஓவர்களில் 227 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதில் அணித் தலைவர் ரோஸ் ரெய்லர் 69, குப்தில் 65 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் வாகாப் றியாஸ் 3 விக்கெட்டுக்களையும் உமர் குல், சகிட் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சொகைப் அக்தர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 6 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு சதமடித்து அசத்திய ஷீஷாட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.




# நடுவரின் தீர்ப்புக்கு மறுபரிசீலனை அறிமுகம்

உலகக்கிண்ண போட்டிகளின்போது நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறை (யு.டி.ஆர்.எஸ்) சுப்பர் ஓவர் ஆகியவை செயல்படுத்த கின்றன. யு.டி.ஆர்.எஸ். முறையின் மூலம் ஒரு வீரருக்கு நடுவர் தீர்ப்பு வழங்கிய பின்னர், அதில் சந்தேகம் எழுந்தால் சம்மந்தப்பட்ட வீரர், கள நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு மூன்றாவது நடுவரிடம் கோரலாம்.

இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தால் அதன்பின்னர் இரு அணிக்கும் தலா ஒரு ஓவர் (சுப்பர் ஓவர்) வழங்கப்படும். அதில் வெற்றிபெறும் அணியே அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். யு.டி.ஆர்.எஸ். முறை, சுப்பர் ஓவர் முடிபு ஆகியவற்றை வரவேற்பதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யு.டி.ஆர்.எஸ் முறை இதுவரை டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. அதுவும் சம்பந்தப்பட்ட இருநாடுகளின் ஒப்புதலுக்கு பின்னரே இந்த முறை செயல்படுத்தப்பட்டது. இப்போது முதல் முறையாக உலகக்கிண்ண தொடரில் அறிமுகப்படுத்தப்படுகிறது. யு.டி.ஆர்.எஸ் முறைக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# நடுவர்களின் விபரம் அறிவிப்பு

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான நடுவர்களின் பெயர்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதனடிப்படையில் பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதல் போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் மிர்பூர் மைதானத்தில் மோதவுள்ளன. இப்போட்டிக்கு இங்கிலாந்தின் ஸ்டிவ் டேவிஸ் மற்றும் இலங்கையின் குமார் தர்மசேன ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றவுள்ளனர்.

58 வயதான டேவிஸ் 95 ஒருநாள் போட்டிகளில் நடுவராக செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிலி டொக்ரோவ் மற்றும் அசாட் ரவூப் ஆகியோர் பிரதான 3ஆம் நிலை மத்தியஸ்தர்களாகவும் 4 ஆம் நிலை மத்தியஸ்தர்களாகவும் செயல்படுவர். இதேவேளை ரஞ்சன் மடுகல போட்டி நடுவராக செயற்படுவார்.

டேவிஸ், தர்மசேன ஆகியரோடு அலிம்டார், மராய்ஸ் எரஸ்மஸ், இயன் கோல்ட், டெரல் ஹார்ப்பர், டொனி இல், அசோக டி சில்வா, சைமன் தௌபில், ரொட் டகர், ரிச்சட் கெட்டல்புரோ, நைஜல் லோங், புரூஸ் ஒக்ஸன்போட், அமிர் சஹேபா, சாஹ்வீர் டார்பூர் ஆகியோரும் போட்டிகளின் நடுவர்களாக கடமையாற்ற அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# ஆட்ட நாயகன் சச்சின்

உலகக் கிண்ண அரங்கில் அதிக போட்டிகளில் ஆட்ட நாயகன் விருது வென்றவர்கள் வரிசையில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் முன்னிலை வகிக்கிறார். இதுவரை 36 போட்டிகளில் பங்கேற்றுள்ள சச்சின் 8 போட்டிகளில் ஆட்ட நாயகன் விருது வென்றுள்ளார்.

இதுவரை தொடர்ந்து அவுஸ்திரேலியாவின் மெக்ராத் (6), ரிச்சாட்ஸ் (மே.தீ), கூச் (இங்கிலாந்து), ஜெயசூர்யா (இலங்கை), மார்க் வோ (ஆஸி), குளுஸ்னர் (தெ.ஆ), உள்ளிட்டோர் தலா 5முறையும், ஷேன் வோர்ன் (ஆஸி), சௌரவ் கங்குலி (இந்தியா), டேவிட் பூன் (ஆஸி), அரவிந்த டி சில்வா (இலங்கை), லாரா (மே.இ உள்ளிட்டோர் தலா 4முறையும் ஆட்டநாயகன் விருது வென்றுள்ளனர்.

**இறுதிப்போட்டியில் நாயகன்**

உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்ட நாயகன் விருது வென்றவர்கள் விபரம்,

| ஆண்டு | வீரர் | செயற்பாடு |
|---|---|---|
| 1975 | கிளைவ் லொய்ட் (மே.இ | 102 ஓட்டங்கள் |
| 1979 | ரிச்சர்ட்ஸ்(மே.இ | 138 ஓட்டங்கள் |
| 1983 | மோகிந்தர் அமர்நாத் (இந் | 26ஓட்டங்கள், 3விக்கெட் |
| 1987 | டேவிட் பூன் (ஆஸி) | 75ஓட்டங்கள் |
| 1992 | வசிம் அக்ரம் (பாக் | 33ஓட்டங்கள், 3விக்கெட் |
| 1996 | அரவிந்த டி சில்வா (இலங்) | 107ஓட்டங்கள், 3 விக்கெட்டு |
| 1999 | ஷேன் வோர்ன் (ஆஸி) | 4விக்கெட் |
| 2003 | ரிக்கி பொண்டிங் (ஆஸி) | 140 ஓட்டங்கள் |
| 2007 | கில்கிறிஸ்ட் | 149 ஓட்டங்கள் |

**தொடர் நாயகன்**

ஒவ்வொரு உலகக் கிண்ண தொடரிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்து வீரர்களுக்கு, கடந்த 1992ஆம் ஆண்டு முதல் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டு வருகிறது.

**இதுவரை தொடர் நாயகன் விருது வென்றவர்கள் விபரம்,**

| ஆண்டு | வீரர் | செயல்பாடு |
|---|---|---|
| 1992 | மார்டின் குரோவ் (நியூசி) | 456 ஓட்டங்கள் |
| 1996 | ஜெயசூர்யா (இலங்கை) | 221 ஓட்டங்கள், 7விக்கெட் |
| 1999 | குளுஸ்னர் (தெ.ஆ) | 281 ஓட்டங்கள், 17விக்கெட் |
| 2003 | சச்சின் (இந்தியா) | 673 ஓட்டங்கள், 2விக்கெட் |
| 2007 | மெக்ராத் (ஆஸி) | 26 விக்கெட் |

# ஈழத் தமிழர் பிரச்... நிவாரணம் கிடைக்...

இதில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டும்படுகொலை செய்யப்பட்டும் மீன்பிடி வலைகள் படகுகள் சிதைக்கப்பட்டும் தமிழக மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் கொள்ளையடிக்கப்படுவதுமான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிகழ்ச்சிகளின் உச்சகட்டமாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் வேதாரண்யம் பகுதி புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஜெயக்குமார் இலங்கைக் கடற்படையினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொடுஞ் செயலுக்கு இலங்கைக் கடற்படையினர் காரணமல்ல என வாதிடும் இலங்கை அரசை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கை தமிழர்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவும் அவர்களது நல்வாழ்வுக்கான உதவிகள் இலங்கை அரசினால் வழங்கப்படவும் மத்திய அரசு இலங்கை அரசினை வலியுறுத்த வேண்டுமென்றும், ஏற்கனவே உறுதியளித்தபடி இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு செய்வது ஒன்றுதான் நிரந்தர சகவாழ்வுக்கு வழிவகுத்திடும் என்பதால் அதற்கான அரசியல் தீர்வினைக்காண தேவையான முயற்சிகள் அனைத்தையும் மத்திய அரசு விரைவில் மேற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்றும் இப்பொதுக்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது போன்ற 21 தீர்மானங்கள் தி.மு.க பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்டன. (ச-5)

யோகம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது 20ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலை கட்டிடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். மட்டக்களப்பு வடக்கு உட்பட சத்துருகொண்டான், தன்னாமுனை, ஊரணி, வந்தாறுமூலை, சம்மாந்துறை, மாவடி வேம்பு, சித்தாண்டி, கிராண், பாலச்சோலை, தளவாய் போன்ற பிரதேசங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

எமது அமைச்சில் இருந்து 10 ஆயிரம் பேருக்கு சமைத்த உணவு வழங்கியுள்ளோம். வாகரை, கிராண் பிரதேச செயலகங்களில் உள்ள மக்களுக்கு உலர் உணவு வழங்கப்பட்டுள்ளன.

புத்தூர், சேற்றுக்குடா பகுதியில் 600குடும்பங்களுக்கு அரச கூட்டுறவு சங்கத்தின் மூலமாக உலர் உணவு வழங்கவுள்ளோம் என்றார். (ச-5)

# தடுத்து வைக்கப்பட்டு...

றோர்கள் சகோதரர்கள் பார்க்கவேண்டும் என்று அங்கே போனால் அவர்களுடைய பெயர் பட்டியலில் இருக்கின்றதா? இல்லையா? என்பதை கண்டுகொள்ள முடியும் என்று ஒரு அறிவிப்பை சொல்லியிருக்கிறார்கள்.

இதைவிட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மீள் குடியேறுபவர்கள் தொடர்பான இன்னொரு விடயத்தைப் பற்றி கடந்தமுறை கேட்டிருந்தோம். அதில் இப்போது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எதுவும் இல்லைஎன்றும்சில இடங்களில்இராணுவ முகாம்கள் இருப்பதாகவும் முகாம்களைச் சுற்றி பாதுகாப்புக்காக சில இடங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவை படிப்படியாக விடப்படும் என்ற தொனியில்தான் அவர்களுடைய கருத்து இருந்தது.

ஆனால் நாங்கள் அப்படியல்ல. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் என்பது கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றது. அதேபோன்றே யாழ்ப்பாணத்திலும் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பது வர்த்தமானி அறிவித்தல் மூலம் இல்லாவிட்டாலும்கூட அங்கு இன்னும்மக்கள்மீளக் குடியேற முடியாத நிலை இருக்கின்றது போன்ற விடயங்களை நாங்கள் அவர்களுக்கு மீண்டும் கூறினோம்.

இதேபோன்றே வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் மீளவும் தங்களது சொந்த இடங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் தேவை என்று நாங்கள் வலியுறுத்தினோம். ஆகவே அடுத்த சந்திப்பில் இவை பற்றிய விபரங்களை திட்ட வட்டமாகக்கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இதனைவிட தீர்வு தொடர்பாக எப்படிச் செல்வது என்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

இன்று நாங்கள் அரசியல் தீர்வு தொடர்பாக முதன் முதலாக பேச்சை ஆரம்பித்து இருக்கின்றோம். ஆகவே அடுத்த கட்டக் கூட்டங்களில் தான் அது தொடர்பாக விரிவான ஆய்வுகளுக்குச் செல்லமுடியும் என்று நான் கருதுகின்றேன்.

தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள் கடந்த காலங்களில் நடந்திருக்கின்றது இவைகள் எல்லாவற்றையும் கருத்தில் எடுத்து தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை நோக்கி தற்போது நாங்கள் பயணிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் அதிகாரப் பகிர்வு என்பவை எப்படியிருக்கலாம். எப்படியிருந்தால் அது ஆக்கபூர்வமானதாகவும் செயல்முறைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் என்ற அடிப்படை விடயங்களைப் பற்றிப் பேசியிருக்கின்றோம். ஆகவே அடுத்தடுத்த கட்டங்களில் விபரமாகப் பேசலாம் என்று இருக்கின்றோம் என்றார். (ச-5)

# வடக்குக் கிழக்கில் தொடரும்...

பல இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் சென்று கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள சின்னத்தம்பனை, தட்டான்குளம், கந்தசாமி நகர் ஆகிய கிராமங்களுக்கான வீதிகளில் வெள்ளம் குறுக்கே பல அடி உயரத்தில் பாய்வதனால் இந்தக் கிராமங்கள் போக்குவரத்தின்றி துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த மக்களுக்குத் தேவையான அவசர நிவாரண உதவிகளை மாற்று வழியின் ஊடாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

வவுனியா நகருக்கு கிழக்கே மகாகச்சகொடி பகுதியிலுள்ள போககாவெல என்ற இடத்தில் நேற்று காலை வயல் வேலைக்காகச் சென்ற 40 விவசாயிகள் திரும்பி வரமுடியாமல் வெள்ளம் பெருக்கெடுத்திருப்பதனால் அவர்களை மீட்டு வருவதற்கு விஷேட பொலிஸ் குழு ஒன்று அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### தத்தளிக்கும் திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையின் விளைவாக மாவட்டத்தின் இயல்புநிலை மோசமாகப் பாதிப்படைந்து வருகிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வருவதுடன் மாவட்டத்தில் உள்ள 58 முகாம்களில் இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் உறவினர், நண்பர்களின் இல்லங்களில் தஞ்சமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள பெருமளவிலான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள 60 வீதமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.நிசாம் தெரிவித்துள்ளார்.

### மிதக்கும் மட்டக்களப்பு

வெள்ள நிலைமை காரணமாக மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களின் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தற்காலிக இடங்களில் தஞ்சம் பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களிலிருந்து இதுவரை விடுபடாத நிலையில் மற்றுமொரு வெள்ள அழிவுக்கு இக்குடும்பங்கள் முகம் கொடுத்து நிற்கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை வெளியிடப்பட்ட அறிக்கையின் படி அம் மாவட்டத்தில் 56 நலன்புரி நிலையங்களில் 5 ஆயிரம் குடும்பங்களும் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் சுமார் 7 ஆயிரம் குடும்பங்களும் தற்காலிகமாக தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் வெள்ள நீர் பாய்வதால் 25ற்கும் மேற்பட்ட இடங்களில் தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவ் வழியாக படகுகள் மூலம் மாற்றுப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் சகல புகையிரத சேவைகளும் மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலும் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள நிலை காணப்படுகின்றது. 2 மீனவர்கள் நேற்று படகு கவிழ்ந்து மரணமடைந்துள்ளார்கள். கடந்த 48 மணி நேரங்களில் இம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4ஆக உயர்ந்துள்ளது. (ச-5)

# கொழும்பு துறை...

செல்லப்பட்டனர்.

காயமடைந்து தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு தற்போது தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் வெடிப்புக்கான காரணங்கள் குறித்து தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (எ-5)

# யாழில் இடம்பெறும் வன்முறை...

ளார். இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெள்ளிக்கிழமை அமைப்பின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடுத்தே இக் கடிதம் எழுதப்படுகின்றது.

இவ்வமைப்பு சமூக பொருளாதார மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்த அரசாங்கத்திற்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்தும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவது குறித்தும் தொடர்ச்சியாக சந்தித்து கலந்துரையாடி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் போன்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை என கிடைக்கும் தகவல்களையிட்டுநாம் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

இப் பகுதியில் அரசாங்கத்தின் படைத்தரப்பினர் வலுவாக நிலை கொண்டுள்ள சூழலில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றமை முக்கியமானது. இச் சம்பவங்கள் எல்லாம் தனிப்பட்ட ரீதியானவை அல்ல.

இன்று நாடு எதிர்கொள்ளும் சவாலான சமாதானத்தை வெற்றி கொள்வதே முக்கியமானது. இப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் நீண்ட காலமாக ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள். இம் மக்களின் பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் அரசாங்கம்உறுதிப்படுத்த வேண்டும்.

இது குறித்து நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத் தவறினால் போருக்குப் பிந்திய சமூக மாற்றங்கள், அபிவிருத்தி மற்றும் சமாதானம் ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கும் வகையில் அமைந்துவிடும். இவ் விவகாரத்தில் தாங்கள் கவனம் செலுத்துவீர்கள் என்று நம்பிகிறோம் என இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அமைப்பில் வணக்கத்துக்குரிய பேராயர் டுலிப் சிக்கேரா, பேராசிரியர்கள் அர்ஜுன அலுவிகார, சாவித்திரி குணசேகர, ஞானநாத் அபேசேகர, ரஞ்சினி அபேசேகர, கலாநிதி தேவநேசன் நேசையா, ரஞ்சித் பெர்னான்டோ, சித்தி திருச்செல்வம், வெலியமுன, ஜெசிமா இஸ்மாயில், விஸ்வலிங்கம், மனோகரி முத்தெட்டுவேகம ஆகியோர் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யாழ்ப்பாணத்திலுள்ள பெண்...

குமரன் பத்மநாதன் யாழ்ப்பாணம் சென்று, கழுத்தில் தங்கம் அணியவேண்டாம் எனத் தமிழ் மக்களிடம் சொல்கிறார். அதனை வங்கியில் வைக்குமாறும் கூறுகிறார்.

குமரன் பத்மநாதன் கூறுவதில் இரு காரணங்க்ள் உள்ளன. ஒன்று குமரன் பத்மநாதனுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள நிலை தெரியும். யாழ்ப்பாணத்தில் தங்கம் கழுத்தில் அணிந்துகொண்டுசெல்வது ஆபத்து எனத் தெரிந்துகொண்டு அதிலிருந்து மீள அதனை வங்கியில் வைக்குமாறு அவர் கூறுகிறார்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் கழுத்தில் தாலி அணிந்து சுதந்திரமாகச் சென்றனர். ஆனால் இன்று சுதந்திரமாக தாலி அணிந்து கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாக குமரன் பத்மநாதனே தெரிந்து வைத்துள்ளார்.

மற்றுமொரு காரணம், யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் வங்கிக்குச் சென்று ஆபரணங்களை அடகுவைத்தால் அதன் தகவல்களைத் தான் திரட்ட முடியும் என்பது.

இதேவேளை நாட்டை மீட்ட இராணுவத்தினர் இன்று இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 60 ஆயிரம் இராணுவத்தினர் ஓய்வூதியமின்றி பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். 2011ஆம் ஆண்டு சர்வாதிகாரத்திற்கு அனுகூலமற்ற வருடமாகும். அரசாங்கத்தை அதிகாரத்தில் அமர்த்திய மக்களே இன்று அரசாங்கத்திற்கு எதிராக மாறியுள்ளனர் எனவும் தயாசிறி ஜயசேகர மேலும் கூறியுள்ளார். (ச-5)


## வேலை ஆட்கள் தேவை

**புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிநக்ஸ் & ஜீஸ் பாருக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. தகுதியுள்ளவர்கள் சுய விபரத்துடன் நேரில் வரவும்.**

1. காசாளர் (ஆண்கள்/ பெண்கள்) அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது)
2. விற்பனையாளர் (பெண்/ ஆண்)
3. சமையலறை உதவியாளர் (ஆண்கள்)
4. மேசை கவனிப்பாளர் (ஆண்கள்)
5. சமையலாளர் (ஆண்கள்)

தொடர்புகளுக்கு: 267A, 267B
Power House Road,
Jaffna.

(3632)

## A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு-2
ஆரம்பம்:05/02/2011
சனி [நாளை] காலை 8.00 மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-2342)

## அலுவலர் தேவை
A/L சித்தியுடன் நல்ல கையெழுத்துடன் ஆண் பெண் அலுவலர் தேவை
சனி அல்லது ஞாயிறு நேரில் வரவும்
MyWay English
182 - 1/5, Stanley Rd
Jaffna
077 33 63 456
(க-2340)

## DISTANCE EDUCATION
MADURAI KAMARAJ UNIVERSITY
**Ambiga Higher Education Centre**
(Study and Information Centre)
New Chetty Street, Colombo- 13, SRI LANKA
Tel: 386722 Fax: 433060,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
அம்பிகா உயர் கல்வி நிறுவனம்,
46, புதுச் செட்டித்தெரு,
கொழும்பு-13,
2010.01.31

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் நேரடி இணைப்பாளர்களான கொழும்பில் இயங்கிவரும் எங்களது நிறுவனத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர்

**NEW COLLEGE OF HIGHER STUDIES,
NO: 95, ARIYANKULAM JUNCTION, JAFFNA.**

மட்டுமே வேறு இணைப்பாளர் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். வேறு நபர்களிடம் செய்யப்படும் பதிவுகளுக்கு நாம் பொறுப்பல்ல.

AMBIGA EDUCATION CENTRE
Program Officer
(C-2330)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.